www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் 1 | தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | அன்பளிப்பு ரூ 2/- | 15.3.84


# புரட்சிகர மக்கள் இராணுவம் புலிகள் தலைமையில் உருவாகிறது

**மிகவும் பலம்வாய்ந்ததொழுங்குக்கட்டுப்பாடும்மிக்க, புரட்சிகரமான மக்கள் விடுதலை இராணுவ அமைப்பு ஒன்றினை விடுதலைப் புலிகள் இயக்கம் கட்டி எழுப்பி வருகிறது. வீரமும் விடுதலைப் பற்றும் தியாகமும் தேசப்பற்றும் மிக்க விடுதலை வீரர்களைக் கொண்ட இந்த இராணுவம் நவீனபோர் முறைகளிலும் போர் யுக்திகளிலும் நன்கு பயிற்றப்பட்டது.**

இனவெறி பிடித்த சிங்கள ஆயுதபடைகளால் முற்றுகையிடப்பட்டிருக்கும் எமது மக்களை இன ஒழிப்புத் திட்டத்திலிருந்து பாதுகாக்கவும், ஈற்றில் இந்த அந்நியக்கூலிப் படைகளை எமது புனித மண்ணிலிருந்து விரட்டியடித்து சுதந்திர சோசலிசத்தமிழீழத் தனியரசை நிறுவுவதுமே எமது மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதான நோக்குகளாகும்.

விடுதலைப்புலி இயக்கத்தின் தொடர்ச்சியான, நீடித்த, தீர்க்கமான கொரில்லாப் பாணியிலான ஆயுதப் போராட்டம் பத்து ஆண்டுகளுக்கு மேலான புரட்சிகர வரலாற்றைக் கொண்டது. ஆயுத பலாத்காரத்தைக் கொண்டு ஈழத் தமிழினத்தை அடிமைகொள்ள முடியாது என்ற உண்மையைச் சிங்கள இனவெறி ஆட்சியாளருக்கு இடித்துரைத்தது எமது விடுதலை வீரர்களின் வீரம் செறிந்த போராட்டம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழீழ விடுதலை வரலாற்றில் வீர காவியங்களைப் படைத்த எமது கொரில்லாப் போராட்டம் தமிழர் பிரச்னையை உலகளாவிய ரீதியில் சர்வதேசியப் படுத்தியது, எமது போராட்டமானது சிங்கள அரச அமைப்பை ஆட்டம்காணச் செய்ததுடன், தமிழீழத்தைச் சிங்கள அரசு ஆள முடியாத நிலையையும் உருவாக்கியது. இதனால் விரக்தியும் வெறுப்புமடைந்த சிங்கள இனவாத ஆளும் கும்பலும் அதன் கூலிப்பட்டாளமும் தமது கோபாவேசத்தை அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். அதன் உச்சகட்டமாகவே கடந்த ஜூலை இனப் பூகம்பம்வெடித்தது. படுபயங்கரமான அதன் கோரத்தாண்டவம் தமிழ் பேசும் இனத்திற்கு ஒரு அப்பட்டமான உண்மையை புலப்படுத்தியது. அதாவது சிங்கள இனத்துடன் இனி ஒன்றிணைந்து வாழமுடியாது என்பதனையும் தனிநாடு அமைத்துத்தன்மானத்துடன் வாழ்வதே தமிழினத்திற்கு ஒரே ஒரு வழி என்பதனையும் ஆழமாக உணர்த்தியது.

இந்த அரசியற் தெளிவு காரணமாக, புலி இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதைக்கு மேலும் வெகுசன ஆதரவு பெருகியது. புரட்சிகர புதிய பரம்பரை புலி இயக்கத்தின் பின்னால் அணி திரளத் தொடங்கியது. வெளிநாடுகளிலுள்ள தமிழீழத் தேச பக்தர்களும், இளைஞர்களும் ஆயுதப் போர்த் திட்டத்திற்குஆதரவு தர முன் வந்தனர். இந்தப் புரட்சிகரமான எதார்த்த சூழ்நிலையையும் முற்றி வரும் தேசிய நெருக்கடியையும் கருத்திற் கொண்டே நாம் எமது கொரில்லாப் போர் அணிகளைப் பலப்படுத்தி, விஸ்தரித்து, போர்ப் பிரிவுகளை ஒருமுகப்படுத்தி, கட்டுக்கோப்பான நவீன இராணுவ அமைப் பொன்றை உருவாக்கி வருகிறோம்.



இந்தப் பாரிய இராணுவத் திட்டத்திற்காக நூற்றுக் கணக்கில் இளைஞர்கள் அணி திரட்டப்பட்டு, பயிற்றப் பட்டு, திறமை வாய்ந்த போர் மறவர்களாக மாற்றப் பட்டு வருகிறார்கள். எமது போர் முறைத் திட்டம், ஏனைய விடுதலைக் குழுக்களைப் போல ஒரு சில நூறு இளைஞர்களைமட்டும் பயிற்றுவிக்கும் குறுகிய வரம்புகளைக் கொண்டதல்ல. எமது திட்டம் தேசிய ரீதியானது. முன்னணி இராணுவப் படையைக் கட்டி எழுப்புவ துடன் வெகுசனத்தை ஆயுத பாணிகளாக்கும் பிரமாண்டமான இராணுவ-அரசியல் செயற் திட்டத்தை நாம் வரித்துச் செயல்பட்டு வருகிறோம்.

எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், எமது இராணுவப் போர்முறைத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தவும் எமக்குச் சில **நேசக் கரங்கள்** கை கொடுத்து உதவுகின்றன. இந்த நேச சக்திகளை நாம் பிரச்சார நோக்கில் இனங் காட்டுவது எதிரியை உசார்ப் படுத்துவதாக முடியும். இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்தும் முட்டாள் தனமான அரசியலை நாம் செய்வதில்லை. வெறும் பிரச்சார நோக்கில் பல பொய்களையும் புரட்டுகளையும் கட்டவிழ்த்து விட்டுத் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறும் கேலிக்கூத்தாக்கும் கும்பல்களும் இருக்கத்தான் செய்கின்றன.

விடுதலைப் புலிகளின் இராணுவப்பயிற்சி



தமிழ்ப் பிரதேசங்களில் எழுந்துள்ள பாதுகாப்பற்ற பதட்ட நிலை; ஸ்ரீலங்கா அரசு பேச்சு வார்த்தை என்ற போலித் திரைக்குப் பின்னால் செய்துவரும் யுத்த ஆயத்தங்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதித் திட்டங்கள்; இப்படியாகத் தமிழ் இனத்தைச் சூழ்ந்து வரும் பேராபத்துகளும் எமது இராணுவத் திட்டத்தைத் துரிதப்படுத்த எம்மைத் தூண்டியுள்ளன.

இலங்கையில் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகமே இல்லை என்று கூறுமளவிற்கு இராணுவ ஆட்சி ஸ்திரமாகியுள்ளது. அரசியல், நிர்வாக ஸ்தாபனங்கள் அனைத்திலும் இராணுவமயமாக்கம் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனையிறவு, பலாலி இராணுவ முகாம்களே வடமாகாணத் ஆட்சி நிர்வாக மையமாகி விட்டன. வடமாகாணத்தின் இராணுவ பிரிகேடியர் அரசாங்க அதிபரை விடக்கூடிய அதிகாரங்களை வகித்து வருகிறார். பயங்கரவாதத்தடைச் சட்டம் காக்கி உடை அணிந்த ஆயுதப் படையினருக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியுள்ளது. கேள்வி எதுவுமின்றி ஒரு வீட்டைச் சோதனையிடவோ, ஒருவரைக்கைது செய்யவோ, காவலில் வைக்கவோ பயங்கரவாதத் தடைச்சட்டம் தாராளமாக இடம் தருகிறது. நூறுவீதச் சிங்களமயமான இராணுவப்படையினர் வட, கிழக்கில் செய்யும் அட்டகாசங்களுக்கு எல்லையே கிடையாது. சாதாரண சட்ட நடைமுறைகள் யாவும் அத்துமீறப்படுகின்றன. தமிழ்ப்பகுதியிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் மிகக்கடுமையான தணிக் கைக்கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளன. கிறிஸ்தவ மடாலயங்களிலிருந்து, பல்கலைக்கழகங்களிலிருந்து சாதாரண பாடசாலைகள் வரை சகல ஸ்தாபனங்களும் இராணுவத்தின் கொடூர அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. துண்டு பிரசுரங்களை விநியோகித்த ஒரு பாடசாலை மாணவன் ஆயுதப்படையினரால் சுடப் பட்டு ஸ்தலத்திலேயே மரணமான சம்பவம் தமிழீழத்தில் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

வடக்கில் பெரும்பாலான வங்கிகள் மூடப்பட்டு விட்டன; பல உப தபால் நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. பஸ் போக்குவரத்து இரவு வேலைகளில் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. சனங்கள் இரவில் வீதிகளில் நடமாடுவதே அரிதாகி விட்டது.

### ஆயுதக் குவிப்பு

''இலங்கையின் இந்த ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்கு முகமாக'' இலங்கையின் பாதுகாப்புத் தேவைக்காக அமெரிக்கா அதிக உதவி வழங்கத் தயாராக இருப்பது அமெரிக்கப் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக் குழுவின் தலைவரான திரு ஜோசப் அடாபூவின் உயர் மட்டத் தூது கோஷ்டி அண்மையில் ஜே. ஆர். ஜயவர்த்தனவைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியபோது உறுதிப் படுத்தியுள்ளது. இத் தூது



www.eelamview.com

www.eelamview.com

LIBERATION TIGERS OF THAMIL EALAM

# புலிகளின் குரல்

விடுதலைப் புலி இயக்கத்தின் வீர சுதந்திரப் போராட்டம் பத்து வருடங்களுக்கு மேலான அரசியல் வரலாற்றையுடையது. இலட்சிய உறுதியுடன் இரத்தம் சிந்திப் போராடி தேசிய சுதந்திரச் சுடரை பற்றி எரியச் செய்துவருகிறோம். தமிழ் அரசியற் கட்சிகள் எதிரிக்கு சரணாகதியடைந்து விடுதலை இலட்சியத்தை கைவிட்டு ஒதுங்கியபோதெல்லாம் எமது விடுதலை இயக்கம் இடைவிடாது போராட்டத்தை முன்னெடுத்தது. எமது உறுதியான, தொடர்ச்சியான, கடினமான போராட்டம் காரணமாகவே இன்று எமது மக்களின் தேசியப் பிரச்னை உலக அரங்குவரை மேடையேற்றப் பட்டிருக்கிறது. மக்களின் விடிவுக்காகப் போராடி, மக்களின் ஆதரவு பெற்று, மக்கள் இயக்கமாக வலுவடைந்து, விரிவடைந்து, வளர்ந்து வருகிறது எமது இயக்கம்.

'காய்க்கும் மரத்திற்கு கல்லெறி விழும்' என்பார்கள். அதுபோல, மக்கள் மத்தியில் வேரூன்றிவளர்ந்து விருட்சமாகிவிட்ட எமது விடுதலை இயக்கம் மீது கல்லெறிய ஆரம்பித்திருக்கின்றன ஏனைய அரசியற் குழுக்கள். புரட்சிகர ஆயுதப் போராட்டகளத்தில் எதையுமே சாதிக்க முடியாத நிலையில், வெகுசன ஆதரவை அணிதிரட்ட முடியாது திண்டாடும் தமது தன்னலாகாத் தனத்தை எமது விடுதலை இயக்கம்மீது வெறுப்புணர்ச்சியாக கக்கிவிட முனைகின்றன இந்த விரக்திகண்ட குழுக்கள். விடுதலைப் போராட்ட களத்தில் இறங்கி எதிரியை எதிர்கொண்டு போராடத் திராணியற்ற இந்தக் குழுக்கள், அறிக்கைகள், பிரகடனங்கள் சுவரொட்டிகளாக கடுதாசிப் போராட்டத்தை நடத்தி எமக்கு கரிபூசுவதிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன. மக்களோடு இணைந்து, மக்கள் எதிர்கொள்ளும் பூதாகரமான பிரச்னைகளில் பங்குகொள்ளாமல் தமிழ்நாட்டில் பதுங்கியிருந்து 'ஈழ மக்கள் வெகுசன இயக்கம்' என்று தம்மைத் தாமே பிரகடனப்படுத்திக் கொண்டாற்போல மக்கள் இயக்கமாக மாறி விடலாமென இவர்கள் கற்பனை உலகில் வாழ்கிறார்கள் போலும். பணத்தை வாரிக் குவித்துக்கொண்டு, பத்திரிகை பத்திரிகையாக வெளியிட்டு, பொய்களையும் புரட்டுகளையும் உற்பத்தி செய்தாற் போல மக்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. யார் களத்திலிருந்து போராடுகிறார்கள் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

ஆக்கபூர்வமான விமர்சனத்தை நாம் வரவேற்கவே செய்கிறோம். கருத்துப் பரிமாறல்கள், விவாதங்கள், ஆய்வுகள் ஆக்கபூர்வமாக அமையும் பட்சத்தில் புரட்சிகரமான சித்தாந்தப் பார்வை கூர்மையடையும். அரசியல் விழிப்புணர்வு விசாலமடையும். ஆனால் பொய்களைப் புனைந்து, உண்மையைத் திரித்துக் காட்டி, விதண்டாவாத விமர்சனங்கள் செய்து, ஒரு புனித விடுதலை இயக்கம் மீது சேற்றை வாரி வீசுவது நேர்மையான அரசியற் செயற்பாடு அல்ல. இது மிகவும் கீழ்த்தரமான, நாசகார, மக்கள் விரோத அரசியல் சந்தர்ப்பவாதமாகும்.

நாம் நீண்ட காலமாக பொறுமையைக் கடைப்பிடித்தோம். எத்தனையோ கல்லெறிகளைச் சகித்துக் கொண்டோம். எமக்குள் வேற்றுமையை, பகைமையை வளர்ப்பது எதிரிக்குச் சாதகமாக அமையும் என்பதால் நாம் பொறுமையாக, மௌனமாக இருந்தோம். எமக்கு விழும் குட்டுகளை எல்லாம் பெருந் தன்மையுடன் சகித்துக் கொண்டோம். ஆனால் எமக்கு எதிராக எழுப்பிவிடப்பட்ட அபாண்டமான பொய்கள் மக்கள் மத்தியில் குழப்பத்தைக் கிளப்பியது. எம்மீது கேள்விகள் தொடுக்கப்பட்டன. விசாரணைகள் முன் வைக்கப்பட்டன. சந்தேகங்கள் எழுந்தன. நாம் இனியும் நாவை அடக்கிக் கொண்டிருப்பது, நாம் கடைப்பிடித்த நாகரிகமான பண்புக்கே இழுக்கைக் தேடிக்கொடுக்கும் என்பதால் எமது சகோதரர்களைச் சாடும் நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். நாம் எம்மக்களுக்கு பதில் அளித்தாக வேண்டும். உண்மையை எடுத்துக் கூறவேண்டும். இல்லாது போனால் நாம் உயிரைப் பணயம் வைத்து நடத்தும் இந்த உன்னதப் போராட்டம் அசிங்கப்படுத்தப்பட்டு விடும். எனவே, இதோ இப் பத்திரிகை மூலம் எமது விடுதலைக் குரல் ஒலிக்கிறது. மக்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. விசமத்தனமான விமர்சனங்களுக்கு விமர்சனம் கொடுக்கப்படுகிறது. உண்மையை எடுத்துக் கூறுவதே எமது உயரிய நோக்கம். உண்மை என்றும் நிலைக்கும். காலத்தால் சாகாத உண்மையின் ஒளியில் பொய்யென்ற இருள் நீங்கும். பொய்யர்கள் மக்களால் இனங்கண்டு ஒதுக்கப்படுவர்.

இது எமது அதிகார பூர்வமான இயக்கப் பத்திரிகை. எமது இலட்சியப் பாதை இதில் தெளிவாக்கப்படும். எமது புரட்சிக் கொள்கைகள் இதில் விளக்கப்படும். எமது புரட்சிப் போராட்ட நடவடிக்கைகள் இதில் விபரிக்கப்படும். ஏனைய அரசியற் குழுக்களின் பொய்ப் பிரச்சாரங்கள் இதில் அம்பலமாக்கப்படும். விடுதலை விரும்பிகள் அனைவரும் இப்பத்திரிகையை விரும்பிப் படிப்பார்கள் என்பது உறுதி.

1ம் பக்கத் தொடர்ச்சி

கோஷ்டியிடம் நவீன ரகப் போர்க் கப்பல்களையும், இலங்கை கடற்படையினருக்கு நவீன கடற்படைப் பயிற்சிகளையும் வழங்குமாறு ஜே. ஆர். ஜயவர்த்தன விடுத்த கோரிக்கையினைத் தூதுக்குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் கடற்படையைப் விஸ்தரித்து, நவீன மயப்படுத்தும் அதே நேரத்தில் இராணுவப் படையைப் பலப்படுத்தும் முயற்சிகளிலும் ஸ்ரீலங்கா அரசு துரிதமாக செயற்பட்டு வருகின்றது.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு சொந்தமான ஷோட்ஸ் பிரதர்ஸ், தனியார்நிறுவனமான ஹொட்ஸ்பர் ஆகிய இங்கிலாந்தின் தலையாய நிறுவனங்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் செலவில் 20 கவச வண்டிகள் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, ஏற்கெனவே 12 கவச வண்டிகள் இலங்கை வந்து சேர்ந்துள்ளன. ஷோர்ட்ஸ் நிறுவனம் ஒன்பது ஷோர்ட்லண்ட் கவச வண்டிகளையும் ஒரு கூரைக் கோபுரத்துடன் கூடிய கவச வண்டியையும் வழங்குகிறது. ஹொட்ஸ்பர் லிமிடெட் நிறுவனம் 4 பெருங்கோபுரங்களுடன் கூடிய ஹொட்ஸ்பர் கவச வண்டிகளையும் 6 சிறு கோபுரங்களுடன் கூடிய ஹொட்ஸ்பர் / சண்ட்ரிங்ஹாம் கவச வண்டிகளையும் வழங்கவுள்ளது. இந்த 20 கவச வண்டிகளும் துருப்புகளைக் கொண்டுசெல்லக் கூடியன. சாரதியைத் தவிர மேலும் ஏழு பேரிலிருந்து ஒன்பது பேர்வரை உட்கார்ந்து செல்லக்கூடிய வசதிகளும் இவற்றில் உள்ளன.

இதனைவிட இருட்டில் தெளிவாகப் பார்த்து சுடக்கூடிய தானியங்கு துப்பாக்கிகள், உப இயந்திரத் துப்பாக்கி (SMG), எளிய இயந்திரத் துப்பாக்கி (LMG), வலுமிக்க கைக்குண்டுகள், ரைபிள் ரவைகள், ரிவால்வர்கள், பிஸ்டல்கள் ஆகியன பெருமளவில் தென்னிலங்கையில் குவிக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க உயர்மட்டகாங்கிரஸ் கோஷ்டியின் இலங்கை விஜயமும் (13-1-84) அமெரிக்கப் பிரதி உதவி வெளிநாட்டு அமைச்சர் திரு. ஹோவர்கட் பிஷாபரின் (21-2-84)இலங்கைவிஜயமும் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் ஜூன் மாத அமெரிக்க விஜயமும் அமெரிக்க அரசு ஸ்ரீலங்காபாசிஸ அரசுடன் கைகோர்த்து இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் போக்கினைக் கோடிட்டு காட்டுகின்றன.

''அமெரிக்காவிலிருக்கும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு 7 கோடி 38 லட்சம் டாலர்களை வழங்க முன்வந்திருப்பதாக திரு. ஹோசவர்கட் பிஷாபர் அண்மையில் கொழும்பில் (21-2-84) நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எல் சல்வடோரில் இடதுசாரி கொரில்லாக்களை அழிக்க அரசின் ஆயுதப்படைகளுக்குப் பயிற்சி வழங்கவந்துள்ள அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் ''தங்களது சவப்பெட்டியுடன்தான் அமெரிக்காவுக்குத் திரும்புவார்கள்'' என்று அந்நாட்டு விடுதலைப் போராளிகள்குறிப்பிட்டிருப்பதையே நாம்சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



தகர்ப்புக்குமுன்

## விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்

சிங்கள இராணுவத்தின் கோட்டையாக விளங்கிய முன்னாள் குருநகர் இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெடிகுண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பின் அதிர்ச்சியால் முழுக்கட்டிடங்களும் தகர்ந்து விழுந்து தரைமட்டமாகின. கட்டிடப் பாகங்கள் நூற்றுக்கணக்கான அடிகள் தூரத்திற்கப்பால் போய் விழுந்தன.

விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்ட இந்த இராணுவ முகாம் சிங்கள இராணுவத்தினரின் முன்னாள் நிர்வாக அலுவலகமாக இயங்கி வந்தது. யாழ் மாவட்ட நிர்வாகத் தலைமைப்பீடமாக இயங்கிவந்த இந்தஇராணுவ முகாம் சிங்கள வெறியரின் சித்திரவதைக்குப் பெயர் பெற்றஇடமாக விளங்கியது. நூற்றுக்கணக்கான தமிழீழ விடுதலைப்போராளிகள் இந்த இராணுவ முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டு மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளாகினர். கடந்த ஜூலையில் சிங்கள இராணுவத்தினர் இந்தமுகாமை விட்டுத்தற்காலிகமாக இடம்பெயர்ந்தனர். தற்போது இந்த முகாமை விஸ்தரித்து, புதிய அரண்களை நிறுவிப்பாதுகாப்புகள் நிறைந்த ஒரு கோட்டையாகமாற்றியமைப்பதற்குச் சிங்கள இராணுவத் தலைமைப்பீடம் புதியதிட்டம் ஒன்றைத்தீட்டியது. இதனையறிந்தவிடுதலைப் புலிகள் இயக்கம் இந்த இராணுவ முகாமைக் குண்டுகளை வைத்துத் தகர்த்து விடத் தீர்மானித்தது.

### அரசு அதிர்ச்சி

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் சிங்கள அரசுக்கும் அதன் பாதுகாப்புஅதிகாரிகளுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. யாழ்நகரின் மத்தியில் பலத்த கண்காணிப்புகள் போடப்பட்டிருந்தும் இந்தச்சம்பவம் நிகழ்ந்திருப்பது அரசு வட்டாரங்களுக்கு ஆச்சரியத்தையும், திகிலையும் கொடுத்திருக்கிறது. முழுக் கட்டிடங்களையும் குண்டு வைத்துத் தகர்ப்பதற்குக் குறைந்தது ஆறு மணி நேரமாவது எடுத்திருக்கலாமென அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழீழப்பிரச்சனையைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு நாடகம் நடத்திக் கொண்டிருந்த ஜெயவர்த்தனவுக்கு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒரு புதிய சவாலாக அமைந்திருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தகர்ப்புக்கு பின்






www.eelamview.com

www.eelamview.com





அன்று கண்டியர் அரசு





இன்று காடயர் அரசு

# நான்கு புதிய ஆயுதந்தாங்கிய ஹெலிகோப்டர்கள்

ஜூலை இனக்கலவரத்துக்குப் பின்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் விமானப்படை நான்கு புதிய ஆயுதந்தாங்கிய பெல் ஹெலிகாப்டர்களை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறது. இவற்றில் பெல் 206 ஜெட் ரேஞ்சர்-3 வகையில் இரண்டு ஹெலிகாப்டர்களும், பெல்-212 இனத்தில் இரண்டு ஹெலிகாப்டர்களும் உள்ளன. முன்னைய இரண்டு ஜெட் ரேஞ்சர் ஹெலிகாப்டர்களும் விசேஷ பாதுகாப்புக் கவசங்களையும் பிற வசதிகளையும் கொண்டன. விமானியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத்தக்கதாக இந்த ஹெலிகாப்டரில் விசேஷ துப்பாக்கியும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஹெலிகாப்டரில் பொருத்தப்பட்டிருக்கும் விசேஷ பாதுகாப்புக் கவசங்கள் வெளியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படும் போது இயந்திரத்தையும் விமானியையும் பாதுகாக்க உதவுகின்றன. இதனால் போர் நடவடிக்கைகளின்போது போர் நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்கு மிக அருகில் நின்றுகொண்டே படை வீரர்கள் செயல்பட முடியும். ஒரு ஹெலிகாப்டரில் 14 படை வீரர்கள் இருந்துகொண்டு செல்ல முடியும்.

வட மாகாணத்தில் தமிழீழகொரில் லாக்கள் அரச உடைமைகளை பறித்தெடுத்தல் அரசுப் படைகளுக்கு எதிரான தாக்குதல் என்பன பற்றிய தகவல் இராணுவத்திடமிருந்தே அல்லது பொலிஸிடமிருந்தோ கிடைத்ததும் உடனடியாகச் சம்பந்தப்பட்ட இடத்திற்கு படை வீரர்களைக் கொண்டு செல்ல இவை உதவும். தாக்குதல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் இடத்திலிருந்து 30 மைல் தூர எல்லையில் இந்த ஹெலிகாப்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படை ஏற்கெனவே ஒரு பெல் ரேஞ்சர் ஹெலிகாப்டர்களையும் இரண்டு டொல்பின் ஹெலிகாப்டர்களையும் கொண்டுள்ளது.

# 100 மில்லியன் ரூபாய் செலவில் விசேஷ அதிரடிப்படை

தமிழீழப் புரட்சிகரப் போராட்டங்களை முறியடிப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கம் 100 மில்லியன் ரூபாய் செலவில் பிரிட்டிஷ் கமாண்டோ பிரிவின் (SAS) ஆதரவில் புதிய அதிரடிப் படைப்பிரிவினை அமைத்து வருகிறது. 'சட்டத்தை அமுல்படுத்தும் ஸ்தாபனங்களைப் பலப்படுத்த வேண்டும்' என்ற போர்வையில் இத்திட்டத்தின்கீழ் கட்டுகுருந்த எனுமிடத்திலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பிரிட்டிஷ் நிபுணர்கள் பயிற்சி அளித்துவருகின்றனர். இக்கல்லூரியில் பயிற்றப்பட்டு வெளிவரும் அதிரடிப் படைப்பிரிவினர் முதலாவதாக வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படவிருக்கிறார்கள்.

30மில்லியன் ரூபாய் செலவில் கொழும்பின்சுற்றுப்புற எல்லையில் சகல ஆயுத உபகரண வசதிகளோடும் கூடிய அதிரடிப் படைப்பயிற்சி முகாம் ஒன்றினை நிறுவும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பணியாற்றும் வீரர்களுக்குச் சாதாரண சேவையில் பணியாற்றும் வீரர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட இரண்டு மடங்குக்கும் மேலதிகமான சம்பளம் வழங்கப்படும் இந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கு இன்றியமையாததான புலனாய்வுத் துறையும் இத்துடன் உருவாக்கப்படவிருக்கிறது.







தமிழீழக் காடுகளில் புலிகளின் அதிரடிப்படைப் பிரிவினரின் பயிற்சி

www.eelamview.com

www.eelamview.com






# தனிநபர் பயங்கரவாதமா?

வட இலங்கையில் நடைபெறும் அரசியல்—இராணுவப் போராட்டத்தை ''சட்ட விரோதமான'' ஒன்றாகவும் ''குற்றச் செய்கை'' ஆகவும், வேண்டுமென்றே ஆக்கிக்காட்டும் திட்டமிட்ட முயற்சியும் தமிழீழ தீவிரவாதிகளைத் தனியே பொறுக்கியெடுத்து அழிப்பதிலே காட்டப்பட்டு வரும் சுறுசுறுப்பும் சம காலத்தில் நடைபெற்று வருகின்றன. ஆட்களை உடல்ரீதியாக அழிப்பதற்கு, அடக்குமுறை யந்திரம் ஏவி விடப்படும்: தத்துவங்களை கொள்கைகளை அழிப்பதற்கு மக்களின் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்படும். ஒன்று ஆட்களை உடல் அளவில் அழிப்பதற்கும், மற்றையது அவரது அரசியல் கருத்துக்களையும் தனித்துவத்தையும் அழிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

ஆகவே பூர்சுவா அரசு மிகக்கடுமையான சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சகலரிடமிருந்தும் ஒருபொதுவான இணக்கத்தை காணுவதில் வெற்றியடைந்துவிடும். அம்மாதிரியான அடக்குமுறைச் சட்டத்தைத் தான், தனது முக்கிய எதிரியென்று கருதும் 'தமிழ்பயங்கரவாதி'களுக்கு எதிராக அரசு பயன்படுத்தி வருகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தக்குழுவாக இருந்தாலும் — இந்தப் பாசிஸ்ட் சட்டத்துக்குத் தமது இணக்கத்தை அளிப்பது ஆச்சரியமல்ல; சிறிமாவோ பண்டாரநாயகாவை விட சிங்களஇன தீவிரவாதி வேறு யாரும் இருக்கமுடியாது. 1971-ஆம் ஆண்டுசிறிமாவோ இழைத்த குற்றத்தை அவருடையசகாக்களாக விளங்கிய லங்கா சமசமாஜிகளாலும் கம்யூனிஸ்ட் கட்சியாலும் எப்படி மறைக்கமுடியாதோ அது போல இன்று சிறிமாஅம்மையாரின் தற்போதைய ஆதரவாளர்களான மாவோயிஸ்டுகளும், ரொஸ்கியவாதிகளும் மேற்படி உண்மையை அழித்துவிட முடியாது.

ஆயின் இதில் ஆச்சரியம் என்னவென்றால் — பூர்சுவா அரசு கொள்கை ரீதியிலும் மனோதத்துவ ரீதியிலும், தொடுத்துள்ள போராட்டத்துக்கு கூறப்படும் காரணங்களை இடதுசாரி இயக்கங்களும் அப்படியே விழுங்கிக்கொண்டிருப்பதும் ''தமிழ்ப் பயங்கர வாதம் அல்லது ''தனிநபர் பயங்கரவாதம்'' என்று வெளிப்படையாக அதைக் கண்டிப்பதுதான்.

பாட்டாளி வர்க்கச் சிந்தனையாளர்களிடையே தோன்றியுள்ள பிற்போக்குத்தனமான எண்ணங்களையே இது துரதிருஷ்ட வசமாக எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே எனது நோக்கம் இரு விஷயங்களை தெளிவு படுத்துவதுதான்.

(அ) வடக்கில் இடம் பெறும் ஆயுத நடவடிக்கைகள் பயங்கரவாதத்தின் பாற்பட்டதல்ல. அத்துடன்மார்க்சிய லெனிச சிந்தனைகளுக்கு அது அந்நியமானதுமல்ல. ஆனால் உண்மையில் தேசிய விடுதலைக்கான மக்கள் போராட்டமொன்றின் ஆரம்பக் கட்டத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஆனால் இடதுசாரிகளோ ஒரே மாதிரி பின்வருமாறு கோரஸ்பாடுகிறார்கள்; தமிழ் இளைஞர்கள் வெகு ஜனப் போராட்டத்துக்கு ஆதரவாக தனி நபர் பயங்கரவாதத்தைகைவிட வேண்டும்'' என்பதே அது.

**மிகவும் பரந்துபட்ட அடிப்படையிலான பல்வேறு ஆயுத போராட்டங்கள்கூட முன்னணியில் நின்று இயங்கக் கூடிய ஒரு சிலரின் வன்முறை மூலமே ஆரம்பமாகி, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பின்னர் மக்கள் போராட்டமாக உருவெடுத்திருப்பதை இவர்கள் முழுமையாக எண்ணி பார்க்க மறுக்கிறார்கள்.**

## நிக்கரகுவா விடுதலை போராட்டம்

அண்மைக்காலத்தில் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்ததும் சன்டனிஸ்தாஸ் (SANDI NISTAS) தலைமை தாங்கி நடத்தியதுமான நிக்கரகுவாவின் ஆயுதப் புரட்சியையே ஒரேயொரு உதாரணமாக இங்கு மேற்கோள் காட்டுகிறேன்.

1970 அக்டோபரில் FSLN கொரில்லாக்கள் கொஸ்ராறிக்க விமானமொன்றை திசை திருப்பி கியூபாவுக்கு கொண்டு சென்றார்கள். சிறை வைக்கப்பட்டிருந்த FSLN தலைவர் காரியஸ் பொன் சேகா அமெடோரையும் மற்றும் மூவரையும் விடுதலை செய்யும்படி நிபந்தனை விதித்து நான்கு அமெரிக்கப்பயணிகளை பணயக்கைதிகளாக்கினார்கள்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டக்குழுவொன்றைத் தாக்கியும், பல்வேறு மக்களைக் கொலை செய்தும் சோமாசாவின் நீதிமன்றத்தைச்சேர்ந்த பன்னிரண்டு உறுப்பினர்களை பணயக் கைதிகளாக்கியும்

**தயன் ஜயதிலக**

இவ்வாறு பல்வேறு தலைமறைவு அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டபின்னர் 1974 ஆம் ஆண்டு FSLN திடீரென மறுபடியும் வெளியரங்குக்கு வந்தது. பணயக்கைதிகளாக்கப்பட்ட பன்னிரண்டு பேரையும் கொடுத்து, சிறை வைக்கப்பட்டிருந்த 14 அரசியல் கைதிகளையும் பெருந்தொகை பணத்தையும் அவர்கள் மீட்டனர்.

1970களில் FSLN இயக்கம் பல அரசியல் இராணுவ அதிகாரிகளைக் கொலை செய்ததுடன் கடத்திச் செல்வதிலும் ஆயுதம் தாங்கிய கொள்ளைகளிலும் ஈடுபட்டது. நீண்டகாலமாக அவர்களது ஆயுதப் போராட்டம் மிகக்குறைந்த அளவிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தொடர்ச்சியற்றுமே நடைபெற்று வந்தது. நூற்றுக்கணக்கான தேசியப்பாதுகாப்புப் படையினரை இவ்வாறு அவர்கள் கொன்றனர்.

1974ஆம் ஆண்டு டிசெம்பரில், அடிமைத்தளை மேலும் இறுக்கப்பட்ட பின்னர், வங்கிகளிலும் பாலங்களிலும் இராணுவக் கண்காணிப்புப் படையினர் மீதும் பொலிஸ் நிலையங்களிலும் துணிச்சல் மிகுந்த தாக்குதல் தீவிரமாக்கப்பட்டு, கொரில்லா யுத்தம் என்ற தன்மையை அது அடைந்தது.

இவையனைத்தும் 'மாபெரும் பாட்டாளி வர்க்க இராணுவ நடவடிக்கைகள்' அல்லது, 'தொழிலாளர் இராணுவம்' என்று தர்க்கிகவாதிகள் யாரும் கருதுவார்களானால், அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், இக்கட்டத்தில் 1976ம் ஆண்டு, FSLN இயக்கத்தில் நூறு பேருக்குள்ளாகவே தீவிரவாதிகள் இருந்தனர். FSLN இயக்கத்தில் மாணவர்களே முக்கிய தலைமைத்துவத்தைத் தாங்கினர்.

1977ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்துதான் பல்வேறு மாகாண நகரங்களிலும், தேசியப் பாதுகாப்புப் படைமுகாம்கள்மீது FSLN நேரடித் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தது. 1978 ஆகஸ்டில் நாடாளுமன்றம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது — அதைத் தாக்கியதின் மூலம், FSLN மறுபடியும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியது.

பணயக் கைதிகளை பரிமாற்றம்செய்து சிறையிலிருந்த 59 தமது தோழர்களை அவர்கள் விடுவித்தனர். நிக்கரகுவா மக்களின் வாழ்த்தொலிகளுடன் சண்டினிஸ்ரா கொமாண்டோக்கள் தாம் விடுவித்த தமது தோழர்களுடன் வீதிகளினூடாக விமான நிலையம் நோக்கி வெற்றி உலா வந்தனர். [redacted]

1977—78ஆம் ஆண்டுகளில் FSLN இயக்கத்தில் கடுமையான கொள்கைவாதிகளான தீவிரவாதிகள் 300 பேருக்கும் 400 பேருக்கு மிடையிலேயே இருந்தனர். அதுவும் 23 ஆண்டுகள் இயங்கிய பின்னர் இருந்த நிலை இது.

1978 செப்டம்பரில் இடம் பெற்ற தாக்குதலின்போது ஆயிரம் பேருக்கு குறைவான போராளிகளையே அனுப்பினர். இப்பயங்கரவாதப் புரட்சிக்கு சான்டினிஸ்தா அல்லாதாருக்கு இவர்கள் தலைமை தாங்கினர். இளைஞர்களில் இந்த எழுச்சிப் போராட்டம் (WAR OF LOS MUCHACHOS) தோல்வியடைந்த பின்னர் FSLN இயக்கத்தில் 12 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே இருந்தனர்:

அவ்வாறிருந்தும் இறுதியான தேசியப் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக நடைபெற்ற புகழ்பெற்ற தாக்குதலில் மக்களின் பயங்கரவாதப் போராட்டத்தை முன்னின்று வழிநடத்தி வெற்றியீட்டிய 'சான்டினிஸ்தா' இராணுவத்தில் 3000க்கும் 5000க்கு மிடைப்பட்ட தொகையினரே அங்கம் வகித்தனர்.

உலகில் உள்ள ஒவ்வொரு நிகழ்வையும் அதன் தோற்றத்திலிருந்தும்வளர்ச்சியிலிருந்துமே கணிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில FSLN உடைய இராணுவப்போராட்டம், இன்றைய தமிழ்த் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை யொத்தகுணங்களைக் கொண்டதாகவே அமைந்திருந்தது.

அக்காலத்தில் நிக்கரகுவாவின் கொம்யூனிஸ்ட் கட்சி சன்டினிஸ்தாசின் 'நடவடிக்கைகளைப் பயங்கரவாதம் நிறைந்த பரபரப்பூட்டும் நடவடிக்கைகள் என்று கண்டனம் செய்தனர். இதே போலவே மொன்கடா தாக்குதலை பிற்போக்குத் தனமானது என்று கியூபா கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்தது.

நிக்கரகுவாவின் கொம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் இன்று புரட்சிகர நிக்கரகுவாவில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

மேற்படி FSLN போராட்டவரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உண்மைகளை ஆராயும்போது நாமே மேதாவிகள் என்று கூறிக்

# கொரில்லா யுத்தமா?



www.eelamview.com

**எமது கொரில்லா நடவடிக்கைகளைப் பயங்கரவாதம் என வருணிக்கும் அரசியல் ஞான சூனியங்களின் பார்வைக்கு சிங்கள முற்போக்கு புத்திஜீவியான திரு. ஜயதிலகவின் இக் கட்டுரையை வைக்கிறோம்.**

கொள்ளும் எமது இடதுசாரி இயக்கத்திலுள்ள ஒருசில தத்துவார்த்த வாதிகளே அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கூறக்கூடும். கியூபாவையே தொழிலாளர் இழ் நிலையுற்றிருக்கும் நாடு என்று கூறும் இந்த அரசியல் இயந்திரவாதிகள் எதையும் கூறக்கூடும். அவர்கள் இப்பிரச்னையில் அவ்வாறு நடந்துகொள்ளவில்லையென்றால் ஆயுதமேந்தும் தமிழ் இளைஞர்களின் குணாம்சத்தை மறுபடியும் பரிசீலனை செய்து பார்க்கட்டும்.

வடக்கிலுள்ள ஆயுதம் தாங்கிய குழுக்கள் எதை அடைய முயற்சிக்கின்றன? அதை எவ்வாறு அடைய முயற்சிக்கின்றனர்? இதுகால வரை அவர்கள் சாதித்தது என்ன?

இக்கேள்விகளுக்கான — மறுமொழிகள், கொரில்லாப்போர்த்தந்திர முறைகள் குறித்து, மாவோவும், மாரிஹெலாவும், கினாப் என்பவரும், குவேராவும் எழுதிய நூல்களைப் படித்தவர்களுக்குப் படாரென விளங்கும்.

தமிழ்க் கெரில்லாக்கள், தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய யுத்த தந்திரங்களைக் கையாள வேண்டிய நிலையிலிருந்தாலும், சிறிய போர்த்தந்திரங்களைக் கையாண்டு தொடர்ச்சியான பல எதிர்த் தாக்குதலை நடத்தி தமது பலத்தைக் காட்டியுள்ளனர்.

அரசாங்கம் மேற்கொண்ட திண்மையான எதிர் நடவடிக்கைகள், தமது எதிரி எவ்வளவு அநாகரிகமுடைய கொடியவன் என்பதைத் தமிழ் மக்கள் உணரும்படி செய்துள்ளன. ஆனால் இது மட்டுமன்று. ஆயுதபாணிகள், அப்பாவி இளைஞர்கள் என்ற பேதமின்றி வடபகுதியில் முழுமையான தமிழ் இனத்துக்கும் எதிராகவே அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அங்கு வாழும் ஒவ்வொரு தமிழரும — ஆணோ, பெண்ணோ தமிழராக வாழ்கிற காரணத்தினால் எதிரியாகவே கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்படுகிறான்.

தமிழ் மக்களைத் தனி நாட்டினமாக ஒப்புக்கொள்ள அரசு மறுக்கும் அதே சமயம் — அரசப்படைகளின் மேற்படியான அடக்குமுறைகாரணமாக, தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே, ஒரு தனியரசாகக்கணித்துக் கொள்ளும் நிலைக்கு அவர்களைத் தள்ளுகின்றன.

எனவே வன்முறைக்குழுக்களின் நடவடிக்கைகளையும் அதை முறியடிக்க அரசுமேற்கொள்ளும் அடக்கு முறைகளையும் ஆராயும்போது— தமிழ் மக்களுக்குத் தம்மைத் தாமேயுணர்ந்து கொள்ளவும் தமது எதிரிகளை எளிதாக இனங்கண்டு கொள்ளவும் முடியும்.

அடக்கப்படும் ஒரு தேசிய இனம் என்ற நிலையிலிருந்து அடக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டிய இனம் என்கிற அரசியல் சிந்தனையை தமிழ் மக்களுக்கு இந்நிலை தூண்டுகிறது.

வேலியின் இப்புறத்திலா அப்புறத்திலா என்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலையை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சிங்கள இடதுசாரிகளுக்கும் இந்த நிலை தோற்றுவித்துள்ளது.

ஒடுக்கு முறையின் சக்திகளுக்கு எதிராக நகர்ப்புறக் கெரில்லாக்கள் திடீரென்று மேற்கொண்ட வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளும் கண்ணுக்குத் தெரியக்கூடிய அரசின் நிறுவனங்களும் ஏற்படுத்தியுள்ள நம்பிக்கையென்னவெனில்— அடக்குமுறையிலிருந்து மீட்சிபெற ஆயுதப்போராட்டம் இயலக்கூடியது; அது தார்மீக அடிப்படையில் நீதியானது, அவசியம் தேவையானது; என்பதேயாகும். இது நடைபெற்று வரும் போது பொதுமக்களும் தாமே இப்போராட்டங்களில் வலிய ஈடுபடத் தொடங்கிவிடுவர்.

தாக்கி விட்டுத் தப்பியோடும்நிலையிலிருந்து சில்லறைத் தாக்குதலாக விரிவடைந்து, பரந்த அளவிலான மோதலுக்குத் தயாரான கொரில்லாப்படையாக மாறும் போது தமிழ்த் தீவிரவாதிகளின் தெளிவான இலட்சியமான மக்கள் தேசிய விடுதலை இராணுவம் உருவெடுக்கும்.

இதுவரை தமிழ் கெரில்லாக்கள் செய்து காட்ட முயன்றதெல்லாம், ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழீழ அரசை அமைப்பதற்குள்ள வாய்ப்பு குறித்தும் தமது திறமை குறித்தும் பொது மக்களுக்கு நடைமுறையில் அத்தாட்சிப் படுத்துவதற்கு சில நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்து காட்டியதே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின பாராளுமன்றப் போர்த்தந்திரம் பயனற்றுப் போனதும் ஆயுதப் படைகளின் அடக்குமுறை தொடர்ச்சியாக நடைபெற்று வருவதும் விரிவடைந்து வருவதும் இச்சிந்தனைக்கு வலு ஊட்டியுள்ளன. இதற்குப் பெயர்தான் ஆயுதப் பிரச்சார யுத்த தந்திரமாகும்.

**சாதனைகள்**

இதுவரை ஆயுத மேந்திய தமிழ் இளைஞர்கள் சாதித்துள்ளவை என்ன?

1. ஹபாஷ் (HABASH) கூற்றுப்படி விடுதலை இயக்கத்தை முளையிலேயே கிள்ளி யெறிவதில் எதிரிப்படையின் இயலாத்தன்மையே இயக்கத்துக்கு கிடைத்த முதல்வெற்றியாகும்.

2. சூழ்நிலையை சமாதான நிலைக்குக் கொண்டு வரவிடாமல் அரசாங்கத்தைத் தடுத்து வைத்துள்ளனர்.

3. காவல் படையினரைத் தாக்கிவந்த கெரில்லாக்கள் அதைநிறுத்தி இப்போது இராணுவத்தின் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். இது ஒரு தகுதி மிக்க மாற்றமாகும்.

4. வடபகுதியில் விசேட (அரசியல்) போலீஷ் பிரிவினரின் தகவல் சேகரிக்கும் ஆற்றலை அவர்கள் அழித்தொழித்துவிட்டனர்.

5. ஆகக்குறைந்த அளவு தேவையான வெடி மருந்துகளையும், வேண்டிய அளவு நிதிப்பலத்தையும் அவர்கள் பெற்றுவிட்டனர்.

6. அவர்கள் மறுபடியும் பிரச்சனைக்குரிய ஆயுதப் புரட்சியை மீண்டும் புகுத்தியுள்ளனர். ஜே. வி. பி.யால் முதலில் தொடங்கப்பட்டு இடதுசாரி இயக்கங்களிடையே பிரச்சனைக்குரிய விவாதமாகிவிட்ட புரட்சியை மறுபடியும் புகுத்தி விட்டனர்.

(நன்றி: **லங்கா கார்டியன்** 1—2—1982)



**நெல்லியடியில் புலிகளின் அதிரடித்தாக்குதல்**

# புரட்சியில் பெண்கள்

"எனக்கு ஒன்பது குழந்தைகள் இருந்தாலும் நான் எல்லாச் செயல்பாடுகளிலும் பங்கேற்க விரும்புகிறேன்... நாம் (பெண்கள் என்ற முறையில்) முடிந்தளவு போராடுகிறோம். ஒரு இயக்க அமைப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முடிந்தளவு தன்னை அர்ப்பணிக்க வேண்டியது அவன் கடமையாகிறது. குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது என்பதும், புரட்சியின் பொறுப்பே ஆகும். ஆயுதம் ஏந்துபவர்கள்தான் போராடுபவர்கள் என்பதில்லை. அழுது கொண்டிருக்கும் எனது குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு புரட்சிப் போராட்டத்தில் என்னால் முடிந்த பங்களிப்பைச் செய்வதற்கு வெளியே செல்வது தான் மிகவும் வேதனையைக் கொடுக்கும் விசயம். நான் செய்யும் காரியங்களிலும் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. எனது இலட்சிய உறுதிப்பாட்டிலிருந்து என்னை நம்பிக்கை இழக்கச் செய்ய எனது அயலாரும் எனது உறவினரும் எவ்வளவோ முயன்று பார்த்தனர். நான் அவர்கள் கூறுவதைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. மாறாக என்னோடு சேர்ந்து உழைக்குமாறு நான் அவர்களை மனம் மாற்ற முயற்சிப்பதுண்டு. பெண்களோடு இணைந்து செயலாற்றும்போது சகல நிலைகளிலும் நாம் பரஸ்பரம் அவர்களது துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அவர்கள் எத்தகைய சாக்குகள் கூறுவதற்கும் விட்டுவிடக்கூடாது. அவர்களுடைய பிரச்சனைகள் - குழந்தைகள் அல்லது வீட்டு வேலைகளாக' இருந்தால் நாம் அவர்களுக்கு அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுத்து இத்தகைய சாக்குகள் கூறுவதற்கான காரணங்களுக்கு இடமளிக்கக்கூடாது. அவர்களை எமது சகோதரிகளாக மதித்து, ஒரு குடும்பத்தின் அங்கமாகக்கருதி அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்."

(ஒரு பாலஸ்தீனப் பெண்மணியின் இக்கூற்று எமது ஏழாவது வெளியீடாக வந்துள்ள "பெண்களும் புரட்சியும் - தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு" என்ற நூலிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறது.)



# சமூக விரோதிகள் ஒழிப்பு!

தமிழீழத்தில் இன்று சிங்கள இனவெறியாட்சியாளரால் முடுக்கிவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தால் தமிழ் மக்கள் நாளும் துன்பத்திற்குள்ளாகி வருகின்றனர். 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல் சமூக விரோதக் கும்பல்களும் பணத்திற்காக கொலை செய்தல், தனிப்பட்ட கொள்ளைகள், கற்பழிப்பு, காட்டிக்கொடுப்பு, எமது இயக்கத்தின் பெயரை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற தமது கொடூரமான நடவடிக்கைகளால் மேலும் எமது மக்களைத் துன்புறுத்துகின்றனர்.

அத்துடன் சிங்களக் காவல் படையினரும் இவ்வாறான சமூக விரோதக் கும்பல்களை வாரியணைத்து மேலும் வளரவிட்டு விடுதலை இயக்கங்களின் மேல் மக்களுக்கு வெறுப்புண்டாக்கும் நோக்கில் செயல்பட முயல்கின்றனர். இதை நன்கு உணர்ந்த தமிழ் மக்கள் காவல் படையினரில் நம்பிக்கையிழந்து எமது இயக்கத்தின் பெயரைச் சொல்லித் தனிப்பட்ட கொள்ளைகளில் ஈடுபடுவோரையும் மற்றைய சமூக விரோதிகளையும் அடையாளங்கண்டு எம்மிடம் ஒப்படைத்து வருகின்றனர். இவ்வாறான சக்திகள் தமிழ் மக்களுக்கு துன்பம் விளைவிப்பது மட்டுமல்ல, விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ளுவதற்கு அரச படைகளின் கைக்கூலிகளாகவும் செயல்பட்டு வருவதனால் இவர்கள் மேல் நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதன் முதல் கட்டமாக மக்களால் நன்கு இனங்காட்டப்பட்டு எமது இயக்கத்தினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்ட நான்கு சமூக விரோதிகளுக்கு எமது இயக்கம் மரண தண்டனை வழங்கியுள்ளது.

விடுதலைப்புலி இயக்கத்தினால் இவ்வாரம் மரண தண்டனை விதிக்கப்பட்ட சமூக விரோதிகள் நால்வரின் விபரம் வருமாறு :

1. நெல்லியடிச் சந்தியில் விசுவலிங்கம் குலசிங்கம்
2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சந்தியில் செல்லக்கிளி
3. சுன்னாகத்தில் குக்கூ என்ற குணரெத்தினம்
4. அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அருகாமையில் பொன்னம்பலம் நடராஜா

இந்த நான்கு சமூக விரோதிகளின் மரண தண்டனைக்கு மட்டுமே எமதுஇயக்கம் பொறுப்புரிமை கோருகிறது.

* தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் சமூக விரோதிகளின் பெயர்ப் பட்டியல் எம்மிடமுண்டு. இவர்கள் கடந்த காலத் தவறுகளை உணர்ந்து திருந்தினால் மன்னிக்கப்படுவார்கள். இல்லாவிடின் எமது நடவடிக்கைகள் மேலும் கடுமையானதாகவே இருக்கும்.

www.eelamview.com



# வேஷங்கள்

**"இணைவு முயற்சியில் பிற் போக்குவாதிகளின் ஊடுருவல்கள்"** என்ற தலைப்பில் PLOT (இந்த ஆங்கிலச் சொல்லுக்குச் சதி என்று அர்த்தம்) என்ற சதிக்கும்பல் அண்மையில் விடுத்திருக்கும் அறிக்கையில் தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கிடையிலான ஒற்றுமை முயற்சியில் தங்களின் தோல்விகரமான அநுபவங்களை எழுதப்போய் எமது இயக்கத்தின் மீது சேற்றை வாரி வீசும் தமது வழமையான வேலையைச் செய்துள்ளனர். தாங்கள் மற்றக்குழுக்களோடு ஒருங்கிணைந்து போகமாட்டாமல் ஒவ்வொரு இயக்கத்தையும் இந்த அறிக்கையில் வசைபாடும் இந்தச் சதிக்கும்பலின் தலைவர் உமாமகேஸ்வரன் கடந்தகால வேறுபாடுகளைத் தான் மறந்துவிடத் தயாரென்றும் பிரபாகரனை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சந்தித்துப் பேசத் தயார் என்றும் டில்லியில் இருந்து அறிக்கை விடுவது போன்ற போலித்தனம் எதுவும் இல்லை.

இந்த அறிக்கையை வாசிக்கும் ஒருவர் மனதில் பின்வரும் கருத்துகள் எழுவதற்கு வாய்ப்புண்டு:

(1) உமாமகேஸ்வரன் 'பெரிய மனசு' படைத்தவர்.

(2) அவர் தமிழீழ இயக்கங்களுக்கிடையிலான ஒற்றுமையை மட்டும் தான் முதன்மைப்படுத்துபவர்.

(3) அவரது ஒற்றுமை முயற்சிக்குப் பிரபாகரன்தான் தடையாக நிற்கிறார்.

வென்றெடுத்து விடலாம் என்று சிலர் சிந்திக்கும் வரை இயக்கங்களுக்கிடையில் உண்மையான இணைவு என்பது ஏற்படாது. ஓர் இரு கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை வைத்துக்கொண்டே ஏனையோர் தமக்குப் பின்னால் இணைந்துவிட்டார்கள் என்று **வெளிநாடுகளில் பொய்ப் பிரச்சாரம் செய்து பணம் சம்பாதிக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்** (PLOT) போன்ற இயக்கங்கள் தம்மை மாற்றிக் கொள்ளாதவரை இணைப்பு என்பது மிகவும் கடினமான ஒன்றே" என்று இந்த ஒற்றுமை முயற்சியில் பங்கு கொண்ட (EPRLF) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி "ஈழமுழக்கம்" நவம்பர் 83 இதழில் கூறுகிறது.

விடுதலை இயக்கங்களுக்கிடையிலான இணைப்பு முயற்சியில் தொடர்பு அமைப்பாளராகப் பணியாற்றிய அருளர் 1-1-84ல் விடுத்த அறிக்கையில் PLOT என்னும் இந்தச் சதிக்கும்பல் பற்றிக் கூறுவதாவது:

"பிற்போக்குச் சக்திகள் இந்த விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தைப்போல் நாமும் பணத்தை வைத்து எல்லோரையும் எம்முடைய நிலைப்பாட்டுக்கு அடிமைப்படுத்திக் கொண்டு எங்களுடைய தனிப்பட்ட அபிலாசையை வளர்த்துக் கொள்ளலாம்; பலப்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலையிலேயே இந்த இணைப்பு முயற்சியை சில அமைப்புகள் அணுகுவதாக இருந்தது"

காசு பணம் சேர்த்து அரசியல் வியாபாரம் செய்

உமாமகேஸ்வரன் சொல்லும்கருத்துகளிலேயே பெரும் குளறுபடி காணப்படுகிறது.

**பேட்டி :** முருகுந்தன்
**பத்திரிகை :** ஈழக்குரல் (19—8—83)

**கேள்வி :** இலங்கையில் இன்று உள்ள நிலவரப்படி "தமிழ் ஈழ" விடுதலை அடைவதில் தாமதம் ஏற்படாது என்று கருதுகின்றேன். தங்கள் கருத்து என்ன ?

**பதில் :** தமிழ் மக்களுக்கு "விடுதலை" என்பதை விடத் தனிநாடாகத்தான் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தப் பதிலிலிருந்து தனி நாடாகப் பிரிகின்ற தன்மையை முதன்மைப்படுத்தி, தமிழ் மக்களுக்கு "விடுதலை" என்பதை இரண்டாம் பட்சமாகக் கருதும் நோக்கு தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், இந்த அடிப்படையான கருத்தை அவரே இடைரென்று அதே மாதத்தில் மாற்றிக்கொள்வதில் அவருக்குச் சிரமம் எதுவும் ஏற்படவில்லை.

**பேட்டி :** முருகுந்தன்
**பத்திரிகை:** சண்டே (14-20 ஆகஸ்ட் 1983).

**கேள்வி :** நீங்கள் தனிநாட்டுக்காகப் போராடுகிறீர்களா ?

**பதில் :** நாங்கள் தனிநாட்டுக்காகப் போராடவில்லை. எங்களுடையது ஒரு விடுதலைக்கான போராட்டமே.

(Not a 'separate state'. It is what we call liberation.)

## தமிழீழ விடுதலையை முன்னெடுப்பதுபற்றிய அரசியற் தெளிவோ இராணுவத் திட்டமோ இவர்களிடம் இல்லை

**ஆனால், உண்மை என்ன?**

எங்களைத் தவிர மற்றைய தமிழீழ விடுதலை இயக்கங்களுடன் இவர்கள் கொண்ட இணைவு நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் தூய்மையானவை? பிரபாகரனுடன் சந்தித்துப் பேசத் தயார் என்கின்ற பிரகடனம் ஒருபுறம் இருக்கட்டும். எதிரே இணைவு முயற்சிக்கென்று வந்திருக்கின்ற இயக்கங்களுடன் இவர்கள் என்ன விதமாக நடந்துகொண்டிருக்கிறார்கள்? பாராளுமன்றப்பதவிக்கு இலட்சியத்தை 'ஒரு நொடியில் கைவிட்ட' தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), புரட்சிகர தாபனத்தின் (EROS)கோழைத்தனம், தாபனங்களின் இணைப்பில் தனிநபரின் (அருளரின்) சுயமை, வெளி உலகிற்கு இன்னும் பகிரங்கமாகாத சந்திரகாசனின் கபடத்தனம் என்றெல்லாம் சந்திக்கு வந்து மற்ற இயக்கங்களைப் பற்றி வசைபாடிக் கொண்டிருக்கும் PLOT என்னும் சதிக்கும்பலைப் பார்க்கையில் ஒற்றுமையை முதன்மைப்படுத்தும் இவர்களின் அந்தரங்க சுத்தி அற்புதமாகத்தான் வெளிப்படுகிறது.

தங்களின் சுயமான பலம் போதாது என்று தெரிந்ததும் தங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு தங்களைப் போன்ற மற்றைய சிறு சிறு குழுக்களையும் விழுங்கும் நோக்கில் சதிக்கும்பல் ஒற்றுமை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த முயன்ற விவகாரம் சந்திக்கு வந்திருக்கிறது.

### அரசியல் வியாபாரிகள்

"பணபலமும் ஒரு சில ஆயுதங்களையும் வைத்துக் கொண்டே ஈழ விடுதலையை வதைத் தவிர, தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் நோக்கம் எதுவும் PLOT எனும் சதிக்கும்பலிடம் இல்லை என்பதற்கு இணைவு முயற்சியில் இவர்களுடன் ஈடுபாடு கொண்டவர்களின் இந்தக் கூற்றுக்களே போதுமானவை.

தமிழீழ விடுதலையைத் தாம் வென்றெடுக்க முடியும் என்ற லட்சியத்தில் தமது இயக்கத்தைப் பொறுத்தவரை இந்தச் சதிக்கும்பலுக்குத் தன்னம்பிக்கை சிறிதும் இல்லை. PLOT என்னும் சதிக்கும்பல் காசு சேர்த்துக் கூலிப்படைகளைக் கொண்டு (MERCENARY) புரட்சி நடத்தும் யோசனையையும் கொண்டிருந்தது. சதிக்கும்பலின் ஞானபிதாவான டேவிட் 'அய்யா' அவர்கள் "நாங்கள்போராடி ஒரு நாளும் தமிழ் ஈழம் பெறமுடியாது. வெளிநாடு எதுவும் உதவினால் மட்டுமே தமிழீழ விடுதலை சாத்தியம்" என்று அண்மையில் நேர்ப்பேச்சு ஒன்றில் சொல்லியிருக்கிறார். "புரட்சியை இறக்குமதி செய்ய முடியாது" என்ற புறநிலை உண்மையும், "போராடித்தமிழீழம் பெறமுடியாது" என்ற இவர்களின் இயலாமையும் இவர்களை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது.

### ஞானசூனியங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றி இவர்களுக்கு அரசியற்தெளிவோ, இராணுவத்திட்டமோ எதுவும் இல்லை 'தமிழீழவிடுதலை', 'பிரிவினைவாதம்', 'பாட்டாளிவர்க்கத் தலைமையிலான புரட்சி' என்பனபற்றியெல்லாம்

இந்தப் பதிலிலிருந்து 'விடுதலை' என்பதனை முதன்மைப்படுத்தி, தனிநாடு என்பதனை நிராகரிக்கும் தன்மை தெளிவாகிறது.

ஒரு தேசிய விடுதலையை நிர்ணயிக்கும் சமூக, அரசியல் நிலைமைகளைப் பற்றி அவருக்குத் தெளிவில்லாத காரணத்தால் 1982-ம் ஆண்டு தைப் பொங்கலில் சுதந்திரத் தமிழீழத்தினைப் பிரகடனம் செய்யும் பிரேரணைக்கு உமாமகேஸ்வரன் எனப்படும் முகுந்தன் 6—1—81-ல் கைச்சாத்திட்டார். "இப்பொழுது இல்லை என்றால் எப்பொழுது?" என்று அவர் கையெழுத்திட்ட பிரேரணையின் ஒரு குறிப்பு கேள்வி எழுப்புகிறது. "ஆனால் இந்த இமாலய சாதனையை எப்படிச்சாதிப்பது என்பது பற்றி இத்தீர்மானத்தில் எதுவிதவிபரமோ விளக்கமோ அளிக்கப்படவில்லை, ஆயினும், லண்டன் பிரகடனம் சம்பந்தமாக தமிழீழ அரசியல் அரங்கில் மிகவும் குழப்பகரமான சர்ச்சை எழுந்தது. உலக அரசியல் வரலாற்றில் ஆழமான தரிசனம் அற்றோரும், ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் சிக்கலான பரிமாணங்களை நன்கு புரியாதவர்களும், அவசர புத்தியுடைய கற்பனாவாதிகளும் லண்டன் பிரகடனத்தை எடுத்த எடுப்பில் குருட்டுத்தனமாக வரவேற்றார்கள். பிரகடனத்தின் நோக்கம், உள்ளடக்கம், இலக்குகள், அவற்றால் எழக்கூடிய அரசியல் தாக்கங்கள் ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்யாமல் அவசர புத்தியில் ஆதரவை அளித்தார்கள். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லத் தீவிரமான செயற்றிட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்று கூட்டணித் தலைமையில் எழுந்த விரக்தியானது, தமிழீழத்தை வெளிநாட்டிலிருந்தாவது இறக்குமதி செய்யலாம் என்ற கற்பனாவாதத்தில் இவர்களைத் தள்ளியது போதும்" (பார்க்க: நாடு கடத்தப்பட்ட நிலையில் தமிழீழ அரசு) என்று எமது பிரசுரத்தில் அப்போதே நாம் ஆணித்தரமாக எழுப்பிய கேள்விகளுக்குக் காலம் சரியான பதில்தந்தது.

1982ல் சுதந்திரத் தமிழீழத்தைப் பிரகடனம் செய்துவிடலாம் என்ற உமாமகேஸ்வரனின் குருட்டுத்தனமான, அவசரமான தீர்மானத்தை அரசியல் ஆய்வாளர்கள் மெல்லிய புன்னகையுடன் அவதானித்தார்கள். அந்தத் தீர்மானம் எவ்வளவு நகைப்புக்கிடமானது என்பதைச் சரித்திரம் நிரூபித்தது.

"தைப்பொங்கலன்று தமிழீழம் வருகிறது" என்று 1981ல் குடுகுடுப்பை ஆட்டிய உமாமகேஸ்வரன் SUNDAY (14-20ஆகஸ்ட்1983)இதழில் பின்வருமாறு கூறுகிறார்:

"மக்களைத் தயார்படுத்த இன்னமும் சுமார் இரண்டு வருடங்களாவது எடுக்குமென்று நான் நினைக்கிறேன்".

### வேஷதாரித்தனம்

ஆகஸ்ட் மாதத்தில் 'இரண்டு வருடத்தில் தமிழீழம்' தாலாட்டுப் பாடிய உமாமகேஸ்வரன் இரண்டே மாதங்களில் THE WEEK என்ற சஞ்சிகையில் (13-19 நவம்பர் 1983) பின்வருமாறு கூறுகிறார்:

"நாங்கள் ஆறு மாதங்களுக்கு மேல் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது".

தேசிய விடுதலைப் போராட்டத்தை இவர் தோசை சுடும் விவகாரமாக நினைத்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. சில நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் நூறு ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் அவை சில வருஷங்களிலேயே இன்னியும் எரியப்பட்டிருக்கின்றன. இன்னும் ஆறுமாதத்திற்குள் தமிழீழம், அடுத்த பொங்கலுக்குள், அடுத்த மே தினத்தில் என்றெல்லாம் இவர் சொல்லும் காலண்டர் திகதிகள்-ஒரு குடுகுடுப்பைக் காரனைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது.



இறைகுமாரன்

## இணைப்பு நா... சிரைக்குப் பி...

"நாங்கள் இராணுவத்தினர் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்துமளவிற்கு வளரவில்லை. இந்நிலையில் இராணுவத்தினரைத் தாக்கிவிட்டு ஓடி மறைவதினால் (HIT AND RUN) எதுவித பிரயோசனமுமில்லை. அதே வேளை இதுபோன்ற சம்பவங்களினால் நட்டங்கள் தான் அதிகம். தனிமைப்படுத்தப்பட்ட தாக்குதல்களினால் நாம் எதனையும் அடைய முடியாது என்று SUNDAY சஞ்சிகைக்கு (ஆகஸ்ட் 1983) பேட்டி கொடுக்கும் உமாமகேஸ்வரன் அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு தங்கள் குழு வவுனியாவில் விமானப் படை வீரர்களைத் தாக்கிவிட்டு ஓடி மறைந்த (HIT AND RUN) மைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை.

கொக்குவில் ஞானபண்டிதர் பாடசாலை மண்டபத்தில் (க.பொ.த) சாதாரணதரப் பரீட்சை நடைபெறும்போது தாக்குதல் நடாத்தப் புறப்பட்ட சதிக்கும்பல் வீரர்கள் காவல் நின்ற ஒரேயொரு போலீஸ்காரன் துப்பாக்கியை எடுத்துச்சுட்டதும் தலைதெறிக்க ஓடியதற்குச் சதிக்கும்பலின் கொரில்லா அகராதியில் என்ன பெயர் என்று தெரியவில்லை. தாக்காமலே ஓடிமறையும் தந்திரோபாயமா ?

நாச்சிமார் கோவிலடி[...] பொலிஸ் மீது தாக்கு[...] நடத்தியமையால் — 'அ[...] களைத் தாக்கிவிட்டு [...] மறைவதினால்' உங்களு[...] அகராதியில் எதுவித பய[...] மில்லையே! - அந்தச்சம்ப[...] தால் யாழ்ப்பாணத்[...] மகத்தான பொது ந[...] நிலையம் உட்படயாழ்நகர[...] பற்றி எரிந்ததே! "[...] போன்ற சம்பவங்களி[...] நட்டங்கள் தான் அதி[...] தனிமைப்படுத்தப்பட்ட [...] குதல்களினால் ந[...] எதனையும் அடைய [...] யாது" என்ற உங்க[...] 'ஞாயிறு ஞானோபதேச[...] அப்போது எங்கே போ[...] தாம்?

ஆனைக்கோட்டை[...] பொலிஸ் நிலையத்தைத் [...] கிய போதும், குறிகா[...] வானில் இராணுவ வீ[...] களைத்தாக்கிய போது [...] ஸ்ரீலங்கா அரசின் ஆயு[...] படைகள் எதிர்த்தாக்கு[...] நடத்தியிருந்தால் அத[...] எதிர்கொள்ள இந்தச்ச[...] கும்பல் தயாராக இரு[...] தாமா? தான் உடைத்த[...] மண்கலம்; மருமகள் உடை[...] தால் பொன்கலமாம[...]

ஒரு கொரில்லாத் த[...] குதலின் அரசியல் உள்ளட[...] க்கத்தைக் கிரகிக்கத் தெரியா[...] இவர் கண்ணாடி வீட்[...] டிலிருந்து கல் எறிகிறா[...] மகத்தான கொரில்லா[...] போராட்ட வீரர்களை[...]

தமிழீழ விடுத[...]
LIBERATION TIGERS [...]

LIBERATION TIGERS OF THAMIL EALAM

இயக்க ஒருங்கிணைப்பாளர் அருளர் அவர்களுக்கு,

[illegible]

[TELO]

www.eelamview.com

www.eelamview.com



# ...கள் ஆயிரம்

## ...பு நாடகத்தின் ...ந்தப் பின்னல்

...ாச்சிமார் கோவிலடியில் ...ாலிஸ் மீது தாக்குதலை ...த்தியமையால் — 'அவர் ...த்தாக்கிவிட்டு ஓடி ...றவஇறால்' உங்களுடைய ...ராதியில் எதுவித பயனு ...லையே! - அந்தச்சம்பவத் ...ல் யாழ்ப்பாணத்தின் ...த்தான பொது நூல் ...யம் உட்படயாழ்நகரமே ...நி எரிந்ததே! ''இது ...ன்ற சம்பவங்களினால் ...டங்கள் தான் அதிகம். ...ிமைப்படுத்தப்பட்ட தாக் ...்களினால் நாம் ...னையும் அடைய முடி ...து'' என்ற உங்களின் ...யிறு ஞானோபதேசம்' ...போது எங்கே போன ...ம்?

...ு லைக் கோட்டைப் ...ாலிஸ் நிலையத்தைத் தாக் ... போதும், குறிகாட்டு ...னில் இராணுவ வீரர் ...்த்தாக்கிய போதும் ...ங்கா அரசின் ஆயுதப் ...டகள் எதிர்த்தாக்குதலை ...த்தியிருந்தால் அதனை ...்கொள்ள இந்தச்சதிக் ...பல் தயாராக இருந்த ...ா? தான் உடைந்தால் ...கலம்; மருமகள் உடைத் ... பொன்கலமாமா? ...ு கொரில்லாத் தாக் ...ின் அரசியல் உள்ளடக் ...தக் கிரகிக்கத் தெரியாத ...் கண்ணாடி வீட்டி ...ந்து கல் எறிகிறார்! ...த்தான கொரில்லாப் ...ராட்ட வீரர்களான மாவோவும் ஹோ-சி-மின்னும், ஜியாப்பும், சின் பெங்கும், அல்வர் ஹோஷாவும், பென் பெல்லாவும், கென்யாட்டாவும், பீடல் காஸ்ட்ரோவும், செகுவாராவும் உங்களிடம் தான் கொரில்லாப் போராட்டத்திற்குப் பாடம் கேட்கவேண்டும், போங்கள்!

கொரில்லாப் போராட்டத்தை விட்டு விட்டு வர்க்கப் போராட்டம் பற்றிய அவரின் கண்ணோட்டத்தைப் பார்ப்போம்.

''நாங்கள் மக்கள் அனைவரும் திரண்டுபட்டாளிவர்க்கத்தலைமையில் நடத்தும் ஆயுதப்புரட்சிக்காகவே உழைக்கிறோம்'' என்று ஜூனியர் விகடனில் (17-8-83) முகுந்தன் பதில் சொல்லப் போய் திருபர் கேட்கிறார்:

'பாட்டாளிவர்க்கப் புரட்சி என்றால் அதில் சிங்களப் பாட்டாளிகளும் பங்கேற்க வேண்டாமா?''

இதோ, முகுந்தன் பதில் சொல்கிறார்:

''நிச்சயமாக.''

தமிழ்ப்பாட்டாளிவர்க்கமும் சிங்களப்பாட்டாளி வர்க்கமும் ஒன்று திரண்டு பாட்டாளிவர்க்கப் புரட்சி நடத்தும் ஓர் உயர்ந்த புரட்சிகரக் கட்டத்தில் இந்தத் தேசிய இனப்பிரச்சினையே இவ்வளவு கூர்மை பெற மாட்டாது என்ற மார்க்ஸிய பாலபாடமே இவருக்குத் தெரியவில்லை.

பாட்டாளிவர்க்கப் புரட்சி பற்றி யெல்லாம் PLOT சதிக்கும்பல் தலைவர் இப்படிப் பேட்டி கொடுக்கும் போது, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உத்தியோக பூர்வ ஏடான ''புதியபாதை'' (கார்த்திகை 15,1983) பின் வருமாறு எழுதுகிறது:

'' தமிழீழவிடுதலைப்போராட்டம் என்பது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும். அதனைத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குரியகுணும்சங்களுடன் நடத்த வேண்டும். இதனை விடுத்து தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு வர்க்கப் போராட்டம் எனச்சித்தரிக்க முற்படுவது இடது சாரி வாய்ச்சவடால் வகைப்பட்டதே. சமுதாயத்தின் யதார்த்த நிலைமைகளைக் கணக்கிலெடுக்காது மிகப்பிரமாண்டமான மக்களை வியப்பில் ஆழ்த்தும் நடைமுறைச் சாத்தியமற்ற கோசங்களை முன் வைப்பது தற்போது அரசியல் நாகரிகமாகி விட்டது.''

உமாமகேஸ்வரனின் 'ஜூனியர் விகடன்' போன்ற பத்திரிகைப் பேட்டிக்கு 'இடது சாரிவாய்ச்சவடால்', 'நடைமுறைச்சாத்தியமற்ற கோஷங்களை முன் வைக்கும் அரசியல் நாகரிகம்' என்றெல்லாம் ''புதிய பாதை'' கருத்து வைப்பதை ''நூறு மலர்கள் பூக்கட்டும்'' என்ற மாவோவின் விமர்சன வகைக்குள் அடக்குவதா? அல்லது விஷயம் தெரியாமல் உளறிய ஒருவரின் அபத்த முரண்பாடு என்ற வகைக்குள் அடக்குவதா?

இத்தகைய அரசியல் ஞானம் கொண்ட உமா மகேஸ்வரனின் இந்த சதிக்கும்பல், தான் போகிற வழியையே ஒழுங்காகப் பார்த்துப் போகத் தெரியாமல் எல்லாரையும் சேர்த்துப் போட்டுக் கொண்டு போய் விட வேண்டும் என்று வேறு நினைத்தால் அது பேராசையில் அல்ல,பேரழிவுக்கல்லவா இட்டுச் செல்லும்?

''விடுதலைப் போராட்டத்தின் பேரில் சிறு பிள்ளைத்தனமும் அரைவேக்காட்டுத்தனமும் ''என்ற தலைப்பில் **புதியபாதை** (கார்த்திகை 15, 1983) இதழில் சமூக விரோதிகளுக்கு எதிரான போராட்டம் பற்றி இச்சதிக் கும்பல் கூறுவதாவது:

''சில இயக்கங்கள் சமூக விரோதிகளை ஒழிப்பதன் மூலம் இந்தச்சமுதாயத்தின் அவலங்களை நீக்கிவிட முயல்வது வேடிக்கையானதும் சாத்தியமற்றதுமாகும்.''

இப்படிச் சொல்லுகிறவர்கள் யார்?

''மக்களின் சொத்தைக் கொள்ளையடித்ததால் சிவனடியான் மகாலிங்கம் சுடப்பட்டார்'' என்று (சுதந்திரன் 4—5—83) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட அறிக்கை கூறும் உண்மை என்ன? சிவனடியான் மகாலிங்கத்தைச் சுட்டுக்கொன்றது இவர்களது 'புதிய பாதை'யின் பாதையில் 'வேடிக்கையானதா?' 'அரைவேக்காட்டுத்தனமானதா?' தமிழீழ விடுதலைப்புலிகள் சமூக ஊழல்களை, சமூக விரோதிகளை, சமூக முரண்பாடுகளை 'வெற்றிகரமாகக் கையாண்டு மக்களின் நன்மதிப்பைப் பெறுவதைக் கண்ட இந்த PLOT எனும் சதிக்கும்பல் தாங்களும் இது மாதிரி ஏதாவது செய்து 'நாமும் மக்கள் நலன்களில் அக்கறையுள்ளவர்கள் எனக் காட்ட' முயற்சித்திருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தில் சிவனடியான் மகாலிங்கம் செய்த தவறு யாதெனில் அவர் இந்த PLOT கும்பலுடன் வந்து சேராமல் விட்டது தான். சேர்ந்திருப்பாரெனில் உமா மகேஸ்வரனின் எத்தனையோ இடதுகைகளில் அவரும் ஒருவராக இருந்திருப்பார்.

இந்த சதிக்கும்பலின் குளறுபடிகளைப்பட்டியலிட்டால் அது பாரதமாகும். இத்தகைய கொள்கைத் தெளிவில்லாத கோஷ்டி, சொல்லுக்கும் செயலுக்குமிடையே பாரிய இடைவெளியைக் காட்டும் கும்பல் தமிழீழத் தேசிய விடுதலையை முன்னெடுக்கஇணைவு முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்று சொல்லி எங்களையும் நம்பச் சொல்கிறார்கள். கூரைஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வான் ஏறி வைகுந்தம் காட்டுகிறேன் என்றானும்!

தமிழீழ விடுதலை இயக்கங்களின் அமைப்பு, கொள்கை, நிலைப்பாடு ஆகியன பற்றிச் சதிக்கும்பலுக்குத் தங்களுக்கென்று சொந்தமான கணிப்பீடு எதுவுமில்லை. ஒற்றுமைப் படவிருக்கும் இயக்கங்களின் நிலைப்பாடுகள், அவை எத்தெந்த மட்டத்தில் வளர்ந்து வருகின்றன என்பன பற்றிய அரிச்சுவடித் தெளிவு கூட இல்லாத இச்சதிக்கும்பல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உளச்சுத்தமாக முன்னெடுக்கும் தாபனங்கள் அனைத்தும் தமக்குள் முரண்படாமல் ஒரு பொது உடன்பாட்டிற்கு முன்வரவேண்டும் என்று நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்திருப்பதாகச் சொல்வது எவ்வளவு கேலிக்கிடமானது?

''EROS ஒரு தாபன வடிவமோ அல்லது முறையான வேலைத்திட்டமோ இல்லாதவர்கள் என்பதனாலும் GUES மாணவர்கள் மத்தியில் ஒழுங்காகத் தாபனமயப்பட்டிருப்பதனாலும் அருளர் GUES -டன் இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியதும்'' PLOT கும்பல் GUES -டன் இணைய முயன்றிருக்கிறது.

''பின் EROSஐச் சேர்ந்த ரத்னசபாபதி லண்டனிலிருந்து வந்து, மாணவர் அமைப்பான GUES மக்கள் அமைப்பாகத் தன்னைக் காண்பிப்பதற்காக உருவாக்கிய தாபனமே EPRLF என்பதுடன், இணைவது பயன் தராது என்று கூறியதும்'' உடனே PLOT கும்பல் அந்த இணைப்பு முயற்சியைக் கைவிட்டுவிட்டது. ரத்னசபாபதி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தான் PLOT இணைய வேண்டும் என்றதும் அவருடைய முயற்சிக்கு ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று பாதை மாறி, தடம்மாறியெல்லாம் சதிக்கும்பல் ஓடியிருக்கிறது. இயக்கங்களின் தன்மை குறித்து சதிக்கும்பலுக்கு எந்தவிதமான சுயமான மதிப்பீடும் இல்லை என்பதை இவை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இந்த நிலைமையில் இணைவு முயற்சியில் நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்திருப்பதான தம்பட்டம்தான் சிரிப்புக்கிடமானது.

''இணைவு முயற்சியில் பிற்போக்கு வாதிகளின் ஊடுருவல்கள்'' என்று இவர்கள் தங்களைத்தான் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள் என்பது இறுதி ஆய்வில் தெளிவாகிறது.

இவர்களது நடுச்சந்திப் பிரலாபங்களைச் சனங்கள் அசட்டை செய்யும்போது, ஓங்கி ஓசை எழுப்புவதற்கு 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற முரசத்தின்மீது முழக்கியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கிடையிலான ஒற்றுமை முயற்சியில் எமது நிலைப்பாட்டை இந்த இயக்கங்களின் இணைப்பாளராகப் பணியாற்றிய அருணுக்கு 5-9-82ல் நாம் எழுதிய கடிதத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

''மிகுதி மற்ற இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தில இயங்கத் தொடங்கட்டும். அதில் எமக்குத் திருப்தி ஏற்பட்டதும் நாமும் உங்களுடன் இணைய முயற்சிக்கிறோம்'' என்று தெளிவாகக் கடிதம் கூறுகிறது.


தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இதய சுத்தியோடு முன்னெடுப்பது PLOT என்னும் சதிக்கும்பலின் உன்னத நோக்கமாக இருந்திருந்தால் மற்ற இயக்கங்களோடு முதலில் ஒருங்கிணைந்து ஒரு பொது வேலைத் திட்டத்தில் இயங்கி ஒரு முன்மாதிரியைக் காட்டியிருக்க வேண்டும். அந்த நிலையில் நாங்கள் வந்து இணையா விட்டால் ''பார்! பார்! நீங்கள் மட்டும் தான் ஒற்றுமைக்குத்தடை. பார்த்தாயா, நாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து விட்டோம்! என்று எங்களை நோக்கிக் குறை சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கும். ஆனால் PLOT என்னும் சதிக்கும்பலோ ஒற்றுமை ஏற்படுத்தப்போய் ஏற்கெனவே இருந்திருக்கக் கூடிய புரிந்துணர்வையும் சிதைத்து விட்டிருக்கிறது. நீங்கள் கிணறு வெட்டப் புறப்படும் போதெல்லாம் பூதங்கள் தான் புறப்படுகின்றன.

அதிலும் PLOT என்ற சதிக்கும்பல் EPRLF ஐச் சேர்ந்த சில தோழர்களைக் கடத்திச்சென்று சித்திரவதை செய்து கொண்டு, (ஆதாரம்: சமுமுழக்கம், நவம்பர் 1983) மறுபுறம் தமிழீழ விடுதலைக் குழுக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியினைக் கைவிடாது தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்று கூறும் போது அவர்களின் இழிவான வேஷதாரித்தனம் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது. எல்லா இயக்கத்துடனும் சேர்ந்து முடிந்தாயிற்று; பிரபாகரன் தான் மிச்சம்; ''பழையவைகளை மறந்து, பிரபாகரனை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சந்தித்துப் பேசத்தயார்'' என்ற டில்லி அறிக்கைக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. முதலில் உங்கள் முகத்தில் இருக்கிற கரியைத்துடையுங்கள்.

பதவியையே பெரிதென மதித்து இயக்கத்தை விட்டோடி, கும்பல் சேர்த்து புதிய இயக்கம் தொடங்க முனைந்த ஒரு நபர் இயக்கங்களுக்கிடையே இணைப்புப் பற்றிப் பேசுவது வேடிக்கையானது. தமிழ் ஈழத்துக்கென்றே வாழ்நாள் முழுதும் உழைத்த இறைகுமாரன், உமைகுமாரன் என்னும் அரிய மாமணிகளை—தமிழ் மக்கள் நெஞ்சில் அழியா இடம் பெற்ற இளங்குருத்துகளை நிராயுதபாணிகளான நிலையிலே துடிக்கக் கொன்று ரத்தவெறியாட்டம் நடத்திய உமாமகேஸ்வரனின் சந்ததியினர் மறுபுறம் ''தனிநபர் பயங்கரவாதத்தில் எங்களுக்கு நம்பிக்கையில்லை'' என்று சொல்லும் கயமைத்தனத்துக்கு நிகரானது இது.

மிகவும் குறுகிய சிந்தனையுடன் தமிழீழக்கடை திறந்திருக்கும் PLOT என்னும் சதிக்கும்பல் ஒற்றுமை பற்றிப் பேசுவது வியர்த்தமாகும். இந்தக்காளான்கள் தமிழீழ மக்களின் நம்பிக்கையிலும் எதிர்பார்க்கைகளிலும் ஆலமரமாய் வேரோடி விழுதூன்றி நிற்கும் எங்கள் இயக்கத்தைநோக்கிச்சிறுமை பேசுவது பேதமை.

## நீங்கள் கிணறு வெட்டப் புறப்படும்போதெல்லாம் பூதங்கள் தான் புறப்படுகின்றன!



...ழீழ விடுதலைப் புலிகள்


LIBERATION TIGERS OF THAMIL EALAM

5--9--82.

...அவர்களுக்கு,

[illegible]

தலைவர்,
மத்திய குழு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



உமை குமாரன்

### விடிநட்சத்திரம்


தமிழீழ மக்களின் விடிநட்சத்திரம் தான் எங்களின் விடுதலை இயக்கம். அரசபயங்கரவாதம் அராஜகநர்த்தனம் புரியும் மண்ணிலே நாங்கள் தான் உதயஞாயிறு.விடுதலைப் பாதையில் தங்கள் செங்குருதியைச் சிந்திச் சென்ற சங்கரும், சீலனும், ஆனந்தும், செல்லக்கிளியும், ராஜ்மோகனும் எங்கள் இயக்கத்தின் தாய்மைக்கு அழியாத சாட்சிகள். வீரமும் விடுதலைப் பற்றும் தியாகமும் தீர்க்கதரிசனமும் விடுதலைப்புலிகளின் ரத்தநாளங்கள்.விடிவு எங்கே? விடுதலை எங்கே? என்று ஏங்கி நின்ற தமிழ் மக்களின் மத்தியில் எங்கள் இயக்கம் ஒரு நம்பிக்கை முரசம். தமிழீழ மக்களின் விடுதலையைத்தெளிவான அரசியல் தலைமையிலும் புரட்சிகர மக்கள்விடுதலை இராணுவக் கட்டுக்கோப்பிலும் வென்றெடுக்கும் திறமையும் ஆற்றலும் நமக்குண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான நீண்டபாதையில் முன்னே நடந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மக்கள் மென்மேலும் ஆதரவு தருவார்கள் என்றநம்பிக்கை நமக்குண்டு. எனவே தான் 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆற்றலும் வீரியமும் கொண்ட ஒரே தாபனமான' தமிழீழ விடுதலைப்புலிகளின் பின்னால் மக்கள் அணி திரண்டு கொண்டிருக்கிறார்கள். •

www.eelamview.com

www.eelamview.com

# பிடல் காஸ்ட்ரோவுடன் ஒரு பேட்டி

# புரட்சி தொடரும்



**கேள்வி :** உலகம் முழுவதும் புரட்சியையும் கம்யூனிஸத்தையும் ஏற்றுமதி செய்வதே உங்களது லட்சியம் என்று ஜனாதிபதி றேகன் உறுதியாகப் பேசிவருகிறாரே!

**பதில் :** புரட்சி என்பது ஏற்றுமதி செய்யத்தக்க ஒரு பண்டமென்று நான் கருதவில்லை. அதேசமயத்தில் புரட்சிகர கியூபா பிற லத்தீன் அமெரிக்கப்புரட்சிகரப் போராளிகளுக்குத் தன் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்கியிருக்கிறது என்பதையும் நான் மறைக்க விரும்பவில்லை. சோமோஸாவின் ஆட்சியின் கீழ் நிக்கரகுவாவை எடுத்துக் கொண்டால் அங்கு ஆயுதப் போராட்டத்தைத் தவிர சகலவிதமான ஜனநாயக நடவடிக்கைகளும் பகிஷ்கரிப்புகளும் ஈவிரக்கமற்ற பயங்கரவாதத்தின் மூலமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. சோமோஸாவிற்கு எதிரான போராட்டத்தில் கியூபா மட்டும் தான் உதவி செய்தது என்பதில்லை. மற்றைய அரசாங்கங்கள் கூட இப்போராட்டத்திற்குத் தங்கள் ஒத்துழைப்பினை வழங்கியிருந்த போதும் அவற்றைப்பற்றி ஒருவரும் கதைப்பதில்லை.

அதே சமயத்தில் வாஷிங்டனில் வழிகாட்டலின் பேரிலும் தூண்டுதலின் பேரிலும் பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகள் கியூபாவைத் தனிமைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டதையும் நான் மறைக்க முயலவில்லை. அவர்கள் அரசியல் ரீதியில் மட்டுமல்ல; பொருளாதார ரீதியிலும் பல தடைகளை ஏற்படுத்திக் கியூபாவைத் தனிமைப்படுத்த முயற்சித்தார்கள். எங்களின் புரட்சியைத் தோற்கடிக்க நாசவேலை, ஆயுத ஊடுருவல், அரசியல் சதி முயற்சிகள் போன்ற எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளையும் அவர்கள் ஊக்குவித்தார்கள். எங்களைத் தற்காத்துக் கொள்ளும் புனிதப் போராட்டத்தில் நாம் அவர்களுக்கு நல்ல பதிலடி கொடுத்தோம். இத்தகைய அரசாங்கங்களுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த பிறருக்கும் இக்காலங்களில் நாம் உதவிகள் செய்தோம். வீழ்ச்சியை நோக்கி நடை போடுவது நாங்களல்ல; அவர்கள் தான்.

உண்மையில், நாங்கள் புரட்சியை ஏற்றுமதி செய்யவும் முடியாது. அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. அமெரிக்க மக்கள் எங்கள் மீது அச்சமுற வேண்டும் என்பதற்காக றேகன் இந்த வாதத்தை மிகத்தந்திரமாக முன் வைக்கிறார். இது பழையகால-கம்யூனிஸப் பூச்சாண்டி வந்து விட்டது என்ற தந்திரமான பிரச்சாரமாகும். இத்தகைய வாதங்கள் பிற நாடுகள் மீது றேகன் மிகவும் வெளிப்படையான தலையீட்டை மேற்கொள்ளத்துணை புரிகிறது. ஒரு லட்சம் மக்களையே கொண்ட சின்னஞ்சிறு தீவான கிறனடாவிற்கு எதிராக அநாகரிகமான தலையீட்டை இந்த அடிப்படையிலேயே அமெரிக்கா மேற்கொண்டது.

**கேள்வி :** கிறனடா தீவின் மீதான படையெடுப்பு அந்தப் பிராந்தியத்தில் கியூபாவிற்கு இருந்த கீர்த்திக்கும் அதன் நோக்கத்திற்கும் எதிராக விழுந்த பேரடி என்று றேகன் நிர்வாகம் சொல்லித் திரிகின்றதே!

**பதில் :** கிறனடா மீதான படையெடுப்பு அமெரிக்காவிற்கே ஒருபேரடி என்பது தான் எங்கள் கருத்து. அது ஒருகோழைத்தனமானதும் முட்டாள்தனமானதுமான நடவடிக்கை. இப்படையெடுப்பு அமெரிக்காவிற்கு எந்தப் பெருமையையும் தேடித் தரவில்லை. மாறாக நிக்கரகுவாவிலும், கியூபாவிலும், எல்சல்வடோரிலும் உள்ள புரட்சியாளரின் போராட்ட உணர்வை பன்மடங்கு வீறுபெற்றெழச் செய்துள்ளது.

**கேள்வி :** நீங்கள் சோவியத் யூனியனின்கைப்பொம்மை என்றும் அடிவருடிஎன்றும் றேகன் நிர்வாகம் அடிக்கடி சொல்லி வருகின்றதே! உண்மையில் உங்களுக்கும், சோவியத் யூனியனுக்குமான தொடர்பு எத்தகையது?

**பதில் :** உண்மையில்எங்கள் புரட்சி தன்னியல்பானது. சோவியத் யூனியன் இருப்பது எங்களை பொறுத்தவரை அதிர்ஷ்டவசமானது. எங்கள் சீனிக்குச் சந்தை கிடைக்காது போயிருந்தால், எங்களுக்கு எரிபொருள், எண்ணெய் விநியோகம் இல்லாது போயிருந்தால் ஒருபடையெடுப்புக்கு எதிராக எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் போதுமான ஆயுதங்கள் எங்களுக்கு கிடைக்காதிருந்தால் நாங்கள் இங்கு நிலை கொண்டிருக்கவே முடியாது. றேகன் விடுக்கின்ற அறிக்கையைப்பற்றி எனக்கொரு அக்கறையுமில்லை. அவன் ஒரு சுத்தப் பொய்காரன். எங்கள் மீதான இந்த குற்றச்சாட்டு எப்போதும் உள்ளதுதான். எங்களுக்கு நாங்கள் சோவியத்தின் கைப்பொம்மையாக இருக்கின்றோம் என்ற உணர்வுஎப்போதும்இல்லை. கியூபாவில் சோவியத் அரசுக்கு உரிய சொத்து ஒன்றும் கிடையாது. நாங்கள் பரஸ்பரத் தொடர்பும் செல்வாக்கும் கொண்டவர்களாகவே இருக்கின்றோம், அவர்களிலிருந்து நாங்கள் எவ்வளவு சுதந்திரமாக இருக்கின்றோமோ அது போல அவர்களும் எங்களிலிருந்து சுதந்திரமானவர்களாகவே இருக்கிறார்கள்.

**கேள்வி :** கியூபாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் சுமுகமான உறவுகள் எப்போதாவது ஏற்படுமென்றுகருதுகின்றீர்களா? நீங்கள் தீவிரப்புரட்சிவாதியாக இருப்பதனால் உங்களோடு உடன்பாட்டுக்கு வருவது சிரமமாக இருக்கிறதென்று சில அவதானிகள் வலியுறுத்துகிறார்களே!

**பதில் :** தற்போது கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் குளறுபடி நிறைந்ததாகவும் அபத்தமானதாகவும் இருக்கின்றன. என்றாலும் அவர்கள் எப்போதாவது ஒருசுமுகமான நிலைமையை நோக்கி நகர்ந்தாக வேண்டுமென்ற ஒரு விதமான 'சரித்திர' நம்பிக்கை எனக்குண்டு.

ஆனால், காலம் காலமாக லத்தீன் அமெரிக்காவைத் தங்களுடைய வீட்டின் கொல்லைப்புறமாகக் கருதிக்கொண்டும் தாங்கள் நினைத்தபடி ஆட்சியை உருவாக்கவும் அரசாங்கங்களைத் தூக்கி எறியவும் கட்டளைகள் பிறப்பிக்கவும் லத்தீன் அமெரிக்கத் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களை அமெரிக்கத் தூதுவர்கள் தீர்மானித்துக் கொண்டுமிருந்த காலம்மலையேறிப் போய் விட்டது என்பதை அமெரிக்க ஆட்சியாளர்கள் உணர வேண்டிய காலம் வந்து விட்டது. உலகின் கணிசமான பகுதியில் சோஷலிசமானது திட்டவட்டமான யதார்த்த உண்மைஎன்பதனையும் யுத்தத்தின் மூலமோ பொருளாதாரத் தடைகள்மூலமோ இராணுவ அச்சுறுத்தல்மூலமோ அதனை தடுத்து நிறுத்த முடியாது என்பதனையும் அமெரிக்கா இப்போதாவது உணர்ந்து கொள்ள வேண்டும். வருகின்ற காலங்களில் குறிப்பாக கி.பி. 2000 ஆண்டின் பின் சோஷலிஸத்தை அரசமைப்பாகத் தழுவிக் கொண்ட தனித்த ஒருலத்தீன்அமெரிக்க நாடாககியூபாமட்டும்திகழப் போவதில்லை. 'கியூபப்பாணி' என்று தவறாக நாமமிடப்பட்டிருக்கும் எங்கள் பாதையை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. நாங்களும்அதனைச் சர்வதேசமயப்படுத்த விரும்பவுமில்லை. பன்னாட்டு நிறுவனங்கள் தம் பொருளாதாரத்தை ஆக்கிரமிப்பதைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்ட - சோஷலிச அமைப்பைச் சாராத அரசாங்கங்களும் தோன்றக்கூடும். அமெரிக்கா அதனை விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன இதனை எல்லாம் பல்லைக்கடித்துக் கொண்டு ஏற்றாக வேண்டும்.

இது ஒரு சரித்திர உண்மையாகும். கியூபாவின் தலைவராக நான் இருப்பதற்கும், இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் பிறந்தேயிருக்காவிட்டாலும் கூட இந்த நிகழ்ச்சிகள் சற்று முந்தியோ பிந்தியோ நடைபெற்றே இருக்கும். அமெரிக்க ஏகாதிபத்திய அமைப்பை நானும் என்னுடன் சேர்ந்து லத்தீன் அமெரிக்காவின் லட்சோபலட்ச மக்களும் நிராகரிக்கின்றோம் என்பதுஅமெரிக்காவில் நிலை கொண்டுள்ள முதலாளித்துவ அமைப்பிற்கு சின்ன அச்சுறுத்தல் மட்டுமேயாகும். முதலாளித்துவ அமைப்பு அழிந்தொழிய வேண்டுமென்றும் அதற்குப் பதிலாக லத்தீன் அமெரிக்க நாடுகள் நேசக்கரம் நீட்டத் தக்க நியாயமான மனிதாபிமானம் சார்ந்த ஓர் அமைப்பு உருவாகவேண்டுமென்றும் நான் கருதுகிறேன். அமெரிக்காவில் ஒரு சோஷலிசப் புரட்சியை, அது மிகத் தொலைவில் உள்ளது என்று கருதிய போதும் அதனை உருவாக்கத் தூண்டுவது எனது நோக்கம் இல்லை. ஆனால் உரிய காலம் வரும் போது அத்தகைய ஒரு புரட்சி அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தினாலும் வெகுஜனங்களாலும் தலைமை தாங்கி நடத்தப்படும் என்று நான் நம்புகிறேன்.

**கேள்வி :** உங்கள் புரட்சி வீழ்ச்சியின் விளிம்பில் உள்ளதென்றும் உங்களின் தலைமை இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதென்றும் அறிக்கைகள் கூறுகின்றனவே!

**பதில் :** கியூப்புரட்சியை அழிக்க வல்லமை மிக்க அமெரிக்க அரசாங்கம் சாத்தியமான சகல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. கியூப மக்கள் தங்களைத் தமது புரட்சியுடன் ஆழமாக இனங்காணாமல் போயிருந்தால் நாங்கள் அழிக்கப்பட்டிருப்போம். எங்கள் மக்கள்தான் நின்று தாக்குப்பிடித்தார்கள். இது வெறும் குருட்டு வழிபாடு காரணமாக அல்ல. மறுபுறம் நீங்கள் வீதிகளில் நடந்து சென்றவாறு கியூப மக்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதைக் கேட்பீர்களானால் தாங்கள் தவறென்று கண்டதை அவர்கள் மிகவும் வெளிப்படையாக விமர்சிப்பதனைக் காண்பீர்கள். இன்னும் நாங்கள் எவ்வளவோ செய்தாகவேண்டும் என்பதனை உணர்கிறோம். இன்னும் நாங்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். ஆரம்பத்தில் எங்களிடம் வெறும் சிந்தனைகளே இருந்தன; இப்போது நாங்கள் அநுபவத்தையும் சோத்துப் பெற்றிருக்கிறோம். கியூப மக்கள் இப்போது தான் தங்கள் மண்ணிற்குத் தாங்களே சொந்தக்காரர்களாகியிருக்கிறார்கள். கருப்பாக இருக்கிறார்கள் என்றோ, பெண்களாக இருக்கிறார்கள் என்றோ இன்று யாரும் பேதம் பாராட்டுவதில்லை. கியூப மக்களின் சமூக அந்தஸ்து அவர்களின் வருமானத்தால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையையும் மீறி எங்கள் பொருளாதாரம் கடந்த 25 வருடங்களாக வருடாந்தம் 4.7 வீதமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இது தென் அமெரிக்கக் கண்டத்தின் ஆகக் கூடுதலான வளர்ச்சி வீதமாகும். தலா உணவுப் பொருள் நுகர்ச்சியினைப் பொறுத்தவரை லத்தீன் அமெரிக்காவில் நாங்கள் இரண்டாம் இடத்தை வகிக்கிறோம். சுகாதாரம், கல்வி, கலாசாரம், விளையாட்டு ஆகிய துறைகளில் 3ம் உலக நாடுகளில் நாம் முதன்மை வகிக்கிறோம். பல கைத்தொழில் நாடுகளை விட நாங்கள் முன்னணியில் உள்ளோம். மொத்த ஜனத்தொகையோடு விகிதாசார ரீதியில் ஒப்பிட்டுப்பார்க்கும்போது கியூபாவை விட அமெரிக்காவில் தான் கல்வியறிவற்றவர்களும் ஓரளவு படித்தவர்களும் மிக அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்று நான் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

**கேள்வி :** பிடலுக்கு பின்பு பிடல் நடத்திய புரட்சி என்னவாகும்?

**பதில் :** இது என்னுடைய புரட்சி என்றும் நானில்லாது போனவுடன் இந்தப் புரட்சியும் என்னுடனேயே போய்விடும் என்றும் வெளிநாடுகளில் உலவுகின்ற ஒரு விசித்திரமான அபிப்பிராயம் இது. பிடல் இங்கு இருந்தாலென்ன அல்லது மறைந்தாலென்ன புரட்சியானதுதொடர்ந்து மேற்செல்லும் என்பதை நான்உங்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றேன். ஏனெனில் இது கியூப மக்களின் புரட்சியாகும். எங்களிடம் கூட்டுத் தலைமை காணப்படுகின்றது. நாங்கள் ஒன்று பட்டிருக்கிறோம். ஒரே குறிக்கோளை நோக்கி இயங்குவதில் அநுபவமும்பேரறிவும்படைத்த ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். இது பிடலின் புரட்சியல்ல. இது மக்களின் புரட்சி. நான் எதிர்காலத்தைப் பற்றிக்கவலைப்பட வில்லை.




"லத்தீன் அமெரிக்காவைத் தங்களின் கொல்லைப்புறமாக அமெரிக்கா கருதிய காலம் மலை ஏறிப் போய்விட்டது."

www.eelamview.com

www.eelamview.com

# ஒரு கொரில்லா வீரனின் பாடல்



எனக்கு ஆருயிர்க் காதலி
ஒருத்தி இருந்தாள் ;
ஒரு இரவின் முடிவில் — அவள்
போலீஸ்காரர்களால்
படுகொலை செய்யப்பட்டாள்.

ஏ! காடே! நீ என் ஆருயிர்க் காதலியாய் இரு!
நீயே என் மணப்பெண்.
என் இதயத்தில் அன்பு
வெளிச்சமிடுகிறது ; வெள்ளமாய் ஓடுகிறது.
அந்தக் காதல் வார்த்தைகளை — நான்
எப்பொழுதும் சொல்லத்துணிந்ததில்லை!
ஆனால்.......அருமைக்காடே!
உன் செவிகளில் மெதுவாக உச்சரிக்கிறேன்.

அந்தி மாலைகளில்
உன்றன் மரக்கிளைகள்
மெல்ல அசைந்து — பச்சை இலைகளால்
முத்தம் படாத என் இதழ்களைத்
தடவிக் கொடுக்கின்றன!

என் அம்மா—
அவளையும் இந்தக் கசடர்கள்
கருத்த இருட்டில் — எங்கோ...
தூக்கிச் சென்றார்கள்.
ஏ! காடே! நீயே என் —
அன்பான ஆதரவான அம்மாவாக இரு!
அவளின் அரவணைப்பு இல்லாமல்
வாழவே இயலாது!
காலைப் பனித் துளிகளால்
வலிக்கும் என்
போர்க்கள விழுப்புண்களை
கழுவிக் குளிப்பாட்டு!
அணி வகுத்துச் செல்லும் போதும்
அபாயத்துடன் விளையாடும் போதும்
அன்பான உன் ஆசைப் பார்வையால்
கவனித்துக்கொள்!

எனக்கும்......ஒரு
ஓட்டைக் குடிசை இருந்தது.
காற்று ஏந்தி வந்த
புகை மண்டலத்தால் — அது
சாம்பலாகிப் போனது!

ஏ! காடே! நீ என் குடிசையாய் இரு!
கயமையின் களங்கக் கரங்கள்
உன்னைத் தீண்டவே அஞ்சுகின்றன!
போராட்டங்களின் முடிவில் — அந்தக்
குழப்பமான இரவுகளில்
களைப்புற்று உன் மடிமீது அணைந்தபடி
தவழ்ந்து வளர்கின்ற பொழுது
உன் கனத்த இலைகளால்
கட்டி அணைத்துக்கொள்!
உறங்கும் பொழுது பணிவிடை செய்!

எனக்கும் ஒரு தாயகம் இருக்கிறது.
ஆனால்......கொடுங்கோலர்களின் கீழ்
அடிமையாய்,
துண்டாடப்பட்டு
உடைந்து கிடக்கிறது.

ஏ! காடே! நீ என் புகலிடம்!
ஆனால்...
என் நெஞ்சில் இருக்கும் தாயகமாக
நீ ஆக முடியாது
நாங்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

அம்மாவை விட
அன்பு மனைவியை விட
அழகுக் குடிசையை விட
அன்னை பூமியை
அளவு கடந்து நேசிக்கிறோம்!

ஏ! புரட்சிக்காடே! எங்களைப் பாதுகாத்திடு!
எங்களைக் கவனித்துக் கொள்!
தாயகத்திற்காக — அந்தச்
சாவையும் சவாலுக்கு அழைப்போம்!

டோப்ரி ஜோடாவ்.

(நன்றி : சோஷலிசக்கவிதைகள்)

## நவீன கோயபல்ஸ்

''ரகசியத் தீவிரவாத இயக்கங்கள் மக்களின் ஆதரவைப் பெற்றவை அல்ல. எங்கள் முன்னணி (தமிழர் விடுதலைக் கூட்டணி) தான் மக்கள் ஆதரவைப் பெற்ற இயக்கமாகும்''

—தேவி வார இதழுக்கு (4-1-84) அளித்த பேட்டியில் அமிர்தலிங்கம்

இறுதியாக 1983, மே 18ம் தேதியன்று நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 96 வீதம் தமிழ் மக்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வாக்களிப்பு விபரம் :

| | பருத்தித்துறை | வல்வை | யாழ் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வேண்டுகோளை ஏற்றுத் தேர்தலைப் பகிஷ்கரித்தோர் | 99% | 98% | 85% | 85% |
| அமிர்தலிங்கம் முன்னணிக்கு ஆதரவாகத் தேர்தலில் வாக்களித்தோர் | 0.75% | 2% | 13% | 14% |

## வாடகையா ? இலவசமா ?

''இலங்கையிலே நிம்மதியாக, பாதுகாப்பாக வாழ முடியாத குடும்பங்களுக்குத் தமிழக அரசு தற்காலிக வீடுகளைப் பெருமனதுடன் குறைந்த வாடகையுடன் வழங்கியது.

............உண்மையான எங்கள் நிலை இப்படிச்சீர் கேடாக இருக்கும் போது ஏதோ தமிழக அரசு வீடுகளைச் சும்மா கொடுத்துவிட்டதாகப் பிரமாதமாக இங்கு கதைகட்டிவிருக்கிறார்கள். குறிப்பாக வவுனியா சிவா, திருமலை சம்பந்தன் ஆகியோர் இங்கு தங்குவது பாதுகாப்பல்ல என்பதை உணர்ந்து அலர்களுக்கு இவ்வீடுகள் வழங்கப்பட்டன''

— கூட்டணித்தலைவர் எம். சிவசிதம்பரம்
(வீரகேசரி 27—2—84)

## தமிழீழத் தனிநாடு கேட்டவர்களுக்குத் தமிழகத்தில் தனிவீடு கிடைத்தது!



சிதம்பரத்திற்கும், இரா. சம்பந்தத்திற்கும் இப்போது வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி குடியிருப்பில் 'டி-5', 'பி-5' என்ற எண்ணுள்ள இரு வீடுகள் அவர்களுக்கு வழங்கப் பட்டன.

ஒவ்வொன்றும் ரூ. 2.5 இலட்சம் மதிப்புடையது ஆகும். இந்த வீடுகளின் சாவிகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி. செல்லையாத் தேவர் (தமிழக அரசு) அளித்தார்.

இந்த வீடுகளில், அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுதும் வாடகையின்றிக் குடியிருக்கலாம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் செய்தியையும் அவர்களிடம் [illegible] வாரியத் தலைவர் அன்புடன் தெரிவித்துக் கொண்டார்.

''தமிழ்நாடு அரசின் இத்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணைப்படி, இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் அவர்களுக்கு நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி குடியிருப்பில் டி4. இல்லம் அளிக்கப்பட்டது. மேற்படி இல்லத்தின் சாவியை சிவசிதம்பரம் அவர்களின் துணைவியாரிடம் 20.2.84ல் வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. ஏ. செல்லையாத் தேவர் வழங்கினார்.



திரு தா. சிவசிதம்பரம் வீட்டுச்சாவி பெறுகிறார்



திருமதி நீலா சம்பந்தம் அவர்களிடம் வீட்டுச்சாவி வழங்கப்படுகிறது.

நன்றி: தமிழரசு, தமிழ்நாட்டு

### புத்தபிக்குவின் பிதற்றல்

''இலங்கையில் இன்று புதிய பணக்காரர்களாக இருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்தான். ஐம்பது வருடங்களுக்கு முன் ஒரு தோட்டத் தொழிலாளின் நாளாந்தரக் கூலி 25 சதம். இன்று எஸ். தொண்டமான் போன்ற தலைவர்களின் முயற்சியால் ஒரு தோட்டத் தொழிலாளியின் நாளாந்த கூலி 15 ரூபாயாக அதிகரித்துள்ளது. பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தோட்டத்தில் வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது. வரட்சி இல்லாத காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிக வேலை வாய்ப்புப்பெறும் சாத்தியங்களும் உள்ளன.

இவ்வாறு ஒரு தாய், தகப்பன், மூன்று குழந்தைகளை உள்ளடக்கிய ஒரு குடும்பம் மாதாந்த ரூபாய் 2000/-க்கு மேல் சம்பாதிக்க முடிகிறது. இதற்கு மேலாக அவர்களுக்கு வீடு, தண்ணீர் வசதி, விறகுப்பாவனை, காய்கறிகள் பயிரிடுவதற்கான காணி, கல்வி வசதிகள், சுகாதார வசதிகள் ஆகிய அனைத்தும் இலவசமாகவே கிடைக்கின்றன. அத்துடன் அமைச்சர் தொண்டமானின் திட்டத்தின் கீழ் ஒரு ஜோடி பால்மாடு கிடைத்தால் அவர்கள் மேலும் மாதாந்தம் ரூ. 1500/- வருமானத்தைத் தேடிக்கொள்ள முடிகிறது. இப்படிப் பார்க்கும்போது ஒரு தோட்டத் தொழிலாளியின் குடும்பம் மாதாந்தம் ரூ. 3500/- வருமானத்தைத் தேடிக்கொள்கிறது. இந்தச் சம்பளத்தை ஒரு அரசாங்க அதிபர்கூட உழைக்க முடியாது. ஆகையால்தான் தோட்டத் தொழிலாளர்களை இலங்கையின் புதிய பணக்கார வகுப்பினரென்று நான் சொல்லுகிறேன்''.

(இலங்கை பௌத்த மகா சங்கத்தின் பேரில் வண முடிகே பஞ்ஞசீக மகா நாயக்க தேரோ வட்ட மேசை மகாநாட்டிற்குச் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து.)

www.eelamview.com

www.eelamview.com

# உண்ணாவிரதம்: PLOTன் உளறல்கள்

# டேவிட் பிரசுரம்: சில மனிதர்கள்

ஜூலை இன அழிப்புப் படுகொலையையடுத்து தென்னிலங்கையிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்கள் மீண்டும் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று ஸ்ரீ லங்கா அரசு ஆணை பிறப்பித்த போது, ''ஸ்ரீலங்காவில் உள்ள பல்கலைக்கழகங்கள் எந்நேரத்திலும் மீண்டும் வெலிக்கடையாக மாறும் நிலை உண்டு'' என்று கூறி ''கொலைக்களம் போக வேண்டாம்'' என்று 7-11-83ல் நாங்கள் இடம் பெயர்ந்த மாணவர்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம்.

PLOT என்னும் சதிக் கும்பல் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கும் PLOT BULLET......IN (Feb 84) இதழில் சொல்லியிருப்பது போல ''மாணவர்களது பிரச்சினைகளை மாணவர்களும் அவர்களுடன் கல்வித்துறையுடன் உடனடிச் சம்பந்தம் கொண்டவர்களும் தீர்த்துக் கொள்வார்கள். அதுபோல விவசாயிகள், பெண்கள், தொழிலாளர்கள் பிரச்சினைகளையும் அவரவர்களே தீர்த்துக் கொள்வார்கள்'' என்று சொல்லிக்கொண்டு நாங்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்திருக்க முடியாது. ஏனெனில் மாணவர்களோடும் விவசாயிகள், தொழிலாளர்களோடும் நாளாந்தம் ஏற்படும் பிரச்சினைகளை எல்லாம் அவர்களுடன் ஒன்றி, உறவாடி அவர்களது சகல கஷ்டநஷ்டங்களிலும் பங்கு கொண்டு வரும விடுதலைப் புலிகள் இடம் பெயர்ந்த மாணவர் பிரச்சினைகளிலும் முன்நின்று உழைத்தார்கள். தமிழீழ மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு, அவர்கள் மத்தியில் அரசியல் வேலையையே செய்ய முடியாது தடுமாறும் சதிக்கும்பல் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிப்பது இயல்புதான்.

அதே இதழில் ''தோழர்'' உமா மாணவர்களின் உண்ணாவிரதத்தில் எமது நிலைப்பாட்டைக் கண்டிக்கையில் ''புலிகளின் நடவடிக்கையை பல காரணங்களுக்காகக் கண்டிக்கிறேன்'' என்கிறார். அதில் முதலாவது, ''தங்களின் அடிப்படை உரிமைகளுக்காக-கல்வியைத் தொடரும் உரிமை மறுக்கப்படுவதற்கு எதிராக மாணவர்கள் போராடுகிறார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்'' என்று சொல்கிறார். மாணவர்களின் இந்த உரிமையை ஆதரித்து அவர்களின் போராட்டத்தையே ஒரு வரையறைக்குட்பட்ட அளவில் நாம்தான் முதலில் ஆதரித்து ''கொலைக்களம் போக வேண்டாம்'' என்று கூறினோம். அப்போது தோழர் உமாவைக் காணவில்லை.

''இவ்வாறு மாணவர்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடும் வேளையில், அவர்களது ஸ்தாபன ரீதியான முடிவுகளுக்குக் கட்டுப்படாமல், கொலைக்களங்களுக்குத் திரும்பிச் செல்லும் சுயநலமிக்க சில மாணவர்கள் எமது இனத்தைக் காட்டிக் கொடுப்பவர்களே. இவர்களை மக்கள் அடையாளம் கண்டு கொள்ளல் அவசியம்'' என்று ''தமிழீழ விடுதலையே மாணவர்க்கு விடிவு'' என்ற துண்டுப் பிரசுரத்தில் (14-1-84) நாம் சுயநலமிகளை இனங்கண்டு அவர்களை எச்சரித்தோம். அப்போதெல்லாம் தோழர் உமாவைக் காண முடியவில்லை.

### எது பிரச்சினை?

இந்த PLOT (சதி) ஏட்டில் இடம் பெயர்ந்த மாணவர்களின் பிரச்சினைகளையே விளங்காமல் உமாமகேஸ்வரன் மூடத்தனமாக உளறுவது தெளிவாகத் தெரிகிறது.

''மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு மீண்டும் உள்நுழையப் போராடுகிறார்கள். என்று பாமரத்தனமாக உளறுகிறார். இடம் பெயர்ந்த மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குப் பதிலாக யாழ்ப்பாண, மட்டக்களப்புப் பிரதேசப் பல்கலைக் கழகங்களில் தமது கல்வியைத் தொடரத்தான் போராட்டம் நடத்தினர்கள். போராட்டம நடத்தும் போதும் அவர்கள் பல்கலைக் கழகத்தில் பதிவு பெற்ற-பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் உரிமை கொண்ட-பல்கலைக்கழகத்தில் சட்டபூர்வ அனுமதி பெற்ற மாணவர்களேயாவர். தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இவர்கள் செல்ல வேண்டுமென்று அரசு காலக்கெடு விதித்ததாயினும் இவர்களைப் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தில் 'மீண்டும் உள்நுழையும்' (RE-ENTER) பிரச்சினையே இங்கு இல்லை. உமாமகேஸ்வரனுக்கு இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் பிரச்சினை பற்றி ஒழுங்காகத் தெரியாமலிருந்தால் வாய் மூடிக்கொண்டு பேசாமல் இருப்பது புத்திசாலித்தனமாகும். தங்களுக்குத்தெரியாததைத்தெரிந்ததாகப் பாவனை பண்ணுவது கேலிக்கிடமானது. மாணவர்களது பிரச்சினை பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் இடத்திற்குப் பதிலாக யாழ், மட்டக்களப்புப் பல்கலைக் கழகங்களுக்கு மாற்றம் (transfer) கோரும் பிரச்சினையே தவிர, 'மீண்டும் உள்நுழையும்' (re-enter) பிரச்சினையாகாது.

> ''சகமனிதன் ஒருவன் பட்டினி கிடந்து சாவதை ஒரு பாசிஸவாதியைத் தவிர வேறு யார்தான் இதயமின்றிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?''

''இந்த இலக்கினை அடைவதற்காக ஆயுதங்களை ஏந்திப் போராட வேண்டும் என்று கூறுவது முட்டாள்தனமானது'' என்று தோழர் உமா தனது 'தமிழ் ஈழத்தின் குரல்' ஸ்டுடியோவில் பேட்டி அளிக்கையில் கூறுகிறார். transfer கேட்பதற்கு ஆயுதம் ஏந்திப் போராடச் சொல்லி எந்த மூடனும் சொல்லமாட்டான். ஆனால் தோழர் உமா transferக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விபரிப்பதைப் பாருங்கள் :

''அவர்கள் அவ்வாறு ஆயுதம் ஏந்திப் போராடினால் அவர்கள் மீண்டும் பல்கலைக்கழகத்திற்குப் போகும் எண்ணத்தையே கைவிட வேண்டியதுதான். அவர்கள் தலைமறைவாகத்தான் திரிய வேண்டி வரும். அவர்களது போராட்ட நோக்கமும் தோற்றுவிடும்'' என்கிறார். ஆயுதப் போராட்டத்தைப் பற்றியே இவர்கள் எவ்வளவு கொச்சையாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

மாணவர்களின் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களோடு தோளோடு தோள் நின்று நாங்கள் போராடிக் கொண்டிருக்கும் போது தோழர் உமா அதன் பார்வையாளராகக் கூட இருக்கவில்லை. ''உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது'' என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், ''நான் திடுக்கிட்டேன்'' என்கிறார் தோழர் உமா. இந்தப் போராட்ட விவகாரங்கள் எல்லாம் இவருக்கு வெறும் 'கேள்வி'ப் படும் விவகாரம் தான்.

### உண்ணாவிரதப் போராட்டத்தில் நடந்தது என்ன?

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழீழம் எங்கும் பரவலாக வெகுசன ஆதரவு திரண்ட போதும் ஆட்சியாளர் எவ்விதத்திலும் அசைந்து கொடுக்கவில்லை. இதனால் உண்ணாவிரதமிருந்த மாணவர் தமது போராட்டத்தை அறவழியில் அதிதீவிரமாக்க முடிவு செய்தனர். இதன் பிரகாரம் 9-1-84லிருந்து ஒன்பது மாணவர் (நான்கு மாணவியர் உட்பட) சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் போராட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தமிழீழம் எங்கும் பதட்ட நிலை தோன்றியது. மாணவர்க்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள் முளைத்தன. கதவடைப்பு, கல்லூரியடைப்புகளுடன் அரசாங்க ஜீப் வண்டிகளுக்கு தீவைப்பு, அரசாங்கக் கட்டிடங்களுக்கு குண்டுவீச்சாக சம்பவங்களும் நிகழ்ந்தன. சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பமாகி ஒரு வாரம் ஆகியும் அரசாங்கம் தனது கண்மூடித்தனமாக போக்கை இறுக்கமாகக் கடைப்பிடித்தது. அதே வேளை, மாணவர் போராட்டத்தை ஆயுத அடக்குமுறையால் முறியடிக்க அரச தரப்பில் திட்டங்கள் தீட்டப்பட்டன. அதன் முதற்கட்டமாக யாழ் பல்கலைக் கழகத்தை மூடுவதற்கு அரசு உத்தரவிட்டது. அடுத்த கட்டமாக, உண்ணாவிரதிகளை பலாத்காரமாகக் கடத்திச் செல்லவும் திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் அரச படைகள் எந்த நேரமும் குறுக்கிடலாம் என்ற அச்ச நிலை எங்கும் பரவியது.

ஜனவரி 16ந்தேதி பிற்பகல். உண்ணாவிரதிகளின் உடல் நிலை கவலைக்கிடமாகியது. ஒரு மாணவி மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தார். அவரது நிலைமை அபாயகரமாக இருந்ததால் வைத்திய நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். மாணவியை உடன் மருத்துவமனையில் அனுமதிக்குமாறும், இல்லாதுபோனால் ஒரு சில மணி நேரத்தில் அவரது உயிருக்கு ஆபத்து நேரிடலாமெனவும் வைத்தியர் எச்சரித்தார். ஏனைய உண்ணாவிரதிகளும் மரணத்தின் விளிம்பை நெருங்கிக் கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஆயிரக்கணக்கில் மக்களும் அங்கு குழுமினர். மாணவப் போராளிகள் எவரும் மரணிப்பதை மக்கள் விரும்பவில்லை. அறவழிப் போரின் ஆன்மீகத் தன்மையை புரிந்து கொள்ள முடியாத அசுரத்தனமான ஒரு அரசுக்கு அநியாயமாக உயிர்களைப் பலி கொடுக்க மக்கள் தயாராக இல்லை. எப்படியும் இவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனிதாபிமான உணர்வே எங்கும், எவரிடமும் மேலோங்கியிருந்தது. இதற்கிடையில் மாணவ ஒன்றியக் குழுவைச் சார்ந்த சிலர் உண்ணாவிரதிகளைப் போலீஸாரிடம் ஒப்படைத்து மருத்துவமனையில் அனுமதிக்கத் திட்டமிட்டனர். இந்த முடிவானது உண்ணாவிரதிகளை அரச அமைப்பிடம் சரணாகதியடையச் செய்வதற்கு ஒப்பானதாகும். போலீஸாரிடம் தாம் கையளிக்கப்படுவதை உண்ணாவிரதிகளே மூர்க்கமாக எதிர்த்தனர். இப்படியான குழப்பகரமான, சிக்கலான, பதட்டமான சூழ்நிலையில் எவருமே எவ்வித தீர்க்கமான முடிவு எடுக்க முடியாது திணறிக்கொண்டிருந்த சமயத்தில் மக்களின் முன்னணிப் படையாகிய எமது இயக்கம் இவ்விவகாரத்தில் நேரடியாக தலையிட்டது. உண்ணாவிரதிகளை அழைத்துச் சென்று அவர்களது உயிரைப் பேணிக்காக்க நாம் முனைந்தோம். உண்ணாவிரதிகளும் தமது பூரண சம்மதத்தை தெரிவித்து எம்மோடு கூடவந்தனர். எமது நடவடிக்கையை அங்கிருந்த மக்கள் கூட்டமும் மனப்பூர்வமாக ஆதரித்தது. இன்று இம்மாணவ மாணவியர் உணவருந்தி உடல் நலத்துடன் சேமமாக இருக்கின்றனர். பாதுகாப்பாக இருக்கின்றனர்.

'மாணவர்களின் உயிரைக் காப்பாற்றுவது என்ற பிரச்சினையில் மாணவர்கள் பொறுப்புவாய்ந்த தீர்மானங்களை எடுப்பதில் முதிர்ச்சி வாய்ந்தவர்கள்'' என்ற உண்மையை நாமேற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் நம்புகிறேன்'' என்று தோழர் உமா கூறுகிறார். உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் உயிர்கள்பற்றியபிரச்சினை அந்தமாணவர் ஸ்தாபனத்தின் பிரச்சினைமட்டும்தான் என்று உமா கருதுவாரானால் அவர் மாபெரும் தவறிழைக்கிறார். உண்ணாவிரதிகளின் உயிர் பற்றிய பிரச்சினை தமிழீழப்போராட்டத்தில் அல்ல, மனித நேயத்தில் ஈடுபாடுகொண்ட ஒவ்வொருவரது அக்கறைக்குரிய பிரச்சினையாகும். கருத்துக் குருடர்களே இது மாணவர்களுக்குமட்டும் உரியதுஎன்று கைகட்டி நிற்பார்கள். இந்தப் போராட்டத்தில் உண்ணாவிரதிகளின் உயிர்களைப் பற்றித் தமிழீழத்தின் நடைபாதையில் திரிகின்ற ஒவ்வொருவருமே அக்கறை கொண்டிருந்தனர். இந்தப் பிரச்சினையில்அக்கறையேயின்றியிருந்த உமா இப்போது வந்து 'அது மாணவர் பிரச்சினையாக்கும். அவர்களுக்கு அதற்குத் தீர்வு காணும் முதிர்ச்சி உண்டு'' என்று ஊர்ப்'பெரியவர்' பாணியில் உபதேசம் செய்வது போலித்தனத்தின் சிகரம்.

### எடுபடுமா ? எடுபடாதா ?

ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழீழத்தை வென்றெடுக்க முடியும் என சதா வலியுறுத்தி வந்த இந்தக்கும்பல், திடீரென அகிம்சைப் போராட்டத்தின் ஆன்மீக சக்தி பற்றித் தத்துவார்த்தம் பேசுவது எமக்கு விந்தையைக் கொடுக்கிறது.

''மயிலே! மயிலே! இறகு போடு!'' என்றால் அது தானாக இறகு போடுமா? அதுவும் சிங்கள மயிலோ மனச்சாட்சி என்பதே இல்லாத பொல்லாத மயில்! அதனிடம் காந்திய வழிமுறை எதுவும் எடுபடாது'' என்று ''மக்கள் பாதை மலர்கிறது'' (செப். 1983) இதழின் பேட்டியில் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவிக்கும் முகுந்தன் என்னும் உமா மகேஸ்வரன் தனது PLOT (சதி) சஞ்சிகையில் கூறுவதாவது :

''ஒரு மக்களின் புரட்சிகரப் போராட்டத்தில் அஹிம்சைப் போராட்டங்கள் மிக இன்றியமையாத பங்கினை வகிக்கின்றன. அஹிம்சைப் போராட்டமானது ஆயுதப் போராட்டத்துடன்இணைந்து போக வேண்டும். ஒரு நாணயத்தின் மற்றொரு பக்கம் அது'' என்கிறார்.

1983 செப்டம்பரில் சிங்கள அரசிடம் காந்திய வழிமுறை ஏதும் எடுபடாது என்றவர் ஐந்து மாதங்களுக்குப் பிறகு காந்திய வழி முறைப் போராட்டம் எடுபடும் என்கிறார். ஒரு நாணயத்தின் மற்ற பக்கம் கதை எல்லாம் வருகிறது. வேண்டாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம்; கால் பட்டாலும் குற்றம்.

ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றில் போர் யுக்திகளிலும், போராட்ட வடிவங்களிலும் மாறுதல்கள் எழுவது உலகானுபவம்

**மக்கள் கருத்து**

**மாணவர்களின் தனிப்பட்ட பிரச்னையல்ல**

இடம்பெயர்ந்த மாணவரின் பிரச்னை அவர்களது தனிப்பட்ட பிரச்னையல்ல. அது முழுத் தமிழினத்தின் பிரச்னை. தமிழ்ப்பெற்றோரின் ஒவ்வொரு குழந்தையும் நாளை பல்கலைக்கழகம் செல்லும் போது ஏற்படும் பிரச்னை இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஆதாரம்: ஈழநாடு (17—1—84) கிருபா, கந்தர் மடம்.

www.eelamview.com

www.eelamview.com

காட்டும் உண்மை. தமிழீழ அரசியல் வரலாற்றில் அகிம்சை வழி தழுவிய அறநெறிப் போராட்டங்கள் நன்கு பரீட்சிக்கப்பட்டுப் படுதோல்வி கண்ட போராட்ட வடிவம் என்பதை யாவரும் அறிவர். எமது விடுதலைப் போராட்ட வளர்ச்சியில் ஆயுதப்புரட்சிப் போராட்ட வடிவம் தோற்றம் கொண்டதும் புரட்சிகர ஆயுதப்போர் விரிவடையும் நிலையிலுள்ளதும், அதன் வாயிலாகவே விடுதலையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதும் இன்று சகலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விசயம். எதார்த்த நிலைமை இவ்வாறிருக்க, அகிம்சை போராட்டத்தை முற்போக்கானது, புரட்சிகரமானது எனக் கழகத்தினர் புகழ் பாடுவது அவர்களது பிற்போக்கான பார்வையையே காட்டுகிறது.

எமது எதிரியிடம் கோரிக்கைகளைமுன்வைத்து சலுகைகளைக் கேட்டு, அவனது மனிதாபிமானத்திற்கு மன்றாட்டமாக தொடுக்கப்படும் போராட்டங்கள் வேறு. எதிரியிடம் எவ்வித சலுகைகளையும் எதிர்பாராது, எமது உரிமைகளை நாமே நிலைநாட்ட, எமது சுதந்திரத்தை நாமே நிலைநிறுத்த தொடுக்கப்படும் போராட்டங்கள் வேறு. முன்னதினை, அறவழிப் போராட்டங்களால், சமரசப் பேச்சுக்களால் முயன்று பார்க்கலாம். பின்னதினை ஆயுதப் போராட்டம் மூலமே முன்னெடுக்க முடியும். மனிதாபிமானமற்ற ஒரு எதிரியிடம் மனுநீதி பெற முடியாது என்பதால் அகிம்சைப் போர்களை தொடுப்பதில் அர்த்தமில்லை. எமது சுதந்திரத்தை, எமது இறைமையை, நாமே நிலைநாட்ட வேண்டுமாயின் புரட்சிகர ஆயுதப்போரைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. ஆகவே எமது இளம் பரம்பரையை, எமது மக்கள் சமுதாயத்தை, இந்தப் புரட்சிகரமான விடுதலைப் பாதையை நோக்கி நெறிப்படுத்துவதை விட்டு விட்டு தற்காலிகமான அரசியல் இலாபங்களுக்காக வரலாற்றால் தூக்கி வீசப்பட்ட பிற்போக்கான பாதையில் இட்டுச்செல்ல முயல்வது உண்மையான மக்கள் பாதை அல்ல. அது மக்கள் பாதை.

### இங்கிலாந்தின் ஜனநாயகம்?

''முழுமையான விடுதலைக்காய் முடிவான பாதையில்...'' என்ற தலைப்பில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மாணவர்களை ஏன் அழைத்துச் சென்றோம் என்பதை விளக்குமுகமாக வெளியிட்ட எமது பிரசுரத்தில் நாம் பின்வருமாறு கூறுகிறோம்:

**''அதிகளவு சுதந்திரமும்'', ''மனித நேயமும்', 'ஜனநாயகமும்' காப்பாற்றப்படுவதாக உலகத்தோர் நம்பும் இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு எதிராக ஐரிஷ் மக்கள் ஆயுதம் தாங்கிப் பல்லாண்டு காலமாகப் போராடி வருகின்றனர். சென்ற சில ஆண்டுகளுக்கு முன் பொபி சாண்ட்ஸ் உட்பட ஆறு ஐரிஷ் விடுதலை வீரர்கள் இங்கிலாந்து சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தபோது அவர்களது கோரிக்கைகளை ஏற்காமல், தட்சர் அரசு விடுதலை வீரர்களை ''பயங்கரவாதி''களாக வர்ணித்து இரக்கமற்ற முறையில் அவர்களை இறக்கவிட்டது. அவ்வாறிருக்க, இன்று உலக நாடுகளால் 'நவீன ஹிட்லர்' என வர்ணிக்கப்படும் ஜெயவர்த்தனாவின் இனவெறியரசு உண்ணாவிரதப் போராட்டத்துக்குச் செவிமடுத்து மாணவர்களின் உரிமையை வழங்கும் என்பது அறியாத்தனமாகும். மாணவர்களின் இந்த உண்ணாவிரதப் போராட்டமானது ஆயுதப் போராட்டமே சரியான வழியென்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.''**

இந்தப் பிரசுரத்தில் இங்கிலாந்து பற்றிய எங்களின் குறிப்பில் இங்கிலாந்தை ஜனநாயக நாடு என்று நாங்கள் நம்புவதான ஓர் அர்த்தம் தெரிகின்றது என்று மூடர்கள் மட்டுமே சொல்வார்கள். 'சுதந்திரம்', 'ஜனநாயகம்' 'மனிதநேயம்' போன்ற பதங்கள் மேற்கோள்களுக்குள் இடப்பட்டு அவை இங்கிலாந்தில் பேணப்படுவதில்லை என்ற எள்ளல் அர்த்தத்துடனேயே அவை பாவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் படிப்பறிவோடு சம்பந்தங்கொண்டவர்கள் எளிதில் உணர்வார்கள்.

''இங்கிலாந்து ஜனநாயக நாடு'' என்று நாங்கள் நம்பிக்கொண்டிருப்பதாகக்கருத்தைத் திரித்து 'சதி'க்கும்பல் ''இங்கிலாந்து ஜனநாயக நாடு இல்லை'' என்று வரிந்து கட்டிக்கொண்டு நிழல் யுத்தம் நடத்துகிறது.

### தண்டனை விதிக்கப்பட்ட நபர்கள்?

''விடுதலைப்புலிகள் உதாரணம் காட்டும் பொபிசாண்ட்ஸையே எடுத்துக் கொண்டாலும் சகமனிதன் ஒருவன் பட்டினி கிடந்து சாவதை ஒரு பாசிஸவாதியை விட வேறு யார் தான் இதயமின்றிப் பார்த்துக் கொண்டிருக்கமுடியும்?'' என்று PLOT தனது பெப்ரவரி இதழில் கேட்கிறது.

இரக்கமில்லாத ஒரு இனவாத அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து அதற்காக உண்ணாவிரதிகள் பட்டினி கிடந்து சாவதை இதயங்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் தான் விடுதலைப் புலிகளும் உண்ணாவிரதிகளை அழைத்துச்சென்றனர்.

இதனை விடுத்து, ''மாணவர்கள் தான் பொறுப்பு வாய்ந்த தீர்மானங்களை எடுப்பதில் முதிர்ச்சி வாய்ந்தவர்கள் ''என்று சொல்லிக்கொண்டு 'சகமனிதன் ஒருவன் பட்டினி கிடந்து சாவதை இதயமின்றிப் பார்த்துக் கொண்டிருக்குமாறு' கூறும் உமாமகேஸ்வரனை அவரது POLT ஏட்டின் வார்த்தையிலேயே பெயர் சூட்டுவதானால் பாசிஸவாதி என்றுதான் கூறமுடியும்.

உண்ணாவிரதிகள் விஷயத்தில் நாங்கள் நடந்துகொண்டது நியாயந்தான் என்பதற்கு PLOTன் இந்த வாசகங்களை விடநாம் வேறு சான்று தேடிப்போகவேண்டியதில்லை.

''பிரிட்டிஷ் சிறைச்சாலையில் பொபி சாண்ட்ஸும் அவரது தோழர்களும் நடத்திய உண்ணாவிரதப்போராட்டத்துடன் யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நடத்திய உண்ணாவிரதப்போராட்டத்தையும் ஒப்பிட்டமை விடுதலைப் புலிகளின் அறியாமையைவெளிப்படுத்துவதாக'' சதிக்கும்பல் தனது ஏட்டில் கூறிமேலும்தொடர்கிறது :

''முதலாவதாக,பூர்ஷுவா நீதிமன்றங்களில் தானென்றாலும் தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை தட்சர் எதிர்நோக்கினார். ஆனால், ஜயவர்த்தனா இனக்கலவரத்திற்கு இலக்கான மாணவர்களை எதிர்நோக்கினார்''

PLOTன் இந்தக் கூற்றை நுணுகி ஆராய்ந்தால் அது எவ்வளவு நச்சுத்தன்மை கொண்டது என்பது தெரிய வரும்.

பிரதமர் தட்சர்நீதிமன்றத்தில்தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை,அதாவது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனை பெற்ற குற்றவாளிகளையே எதிர்நோக்கினார் என்று அவர்கள் கூறுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் எதனை உணர்த்துகிறார்கள்?

தட்சர் அரசு 'கிரிமினல் குற்றவாளிகளாகிய' அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை நிராகரித்து அவர்களை இறக்க விட்டது நியாயமானதுதான், எதிர்பார்க்கக் கூடியதுதான் என்பதைத்தான் உணர்த்துகிறார்கள். நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் செய்த உண்ணாவிரதத்தை தட்சர் அரசு எப்படி கௌரவிக்க முடியும் என்பது அவர்கள் கேட்காமல் கேட்கும் கேள்வி. பொபி சாண்ட்ஸை ஐரிஷ் விடுதலைப் போராளி என்று எழுதுவதற்குக்கூட சதிக்கும்பலுக்குக் கைவரவில்லை. (People who were convicted) ''தண்டனை விதிக்கப்பட்ட நபர்கள்'' என்று எழுதுகிறது.

ஆனால், ஜெயவர்த்தனா இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை எதிர்நோக்குவதால், தட்சர் அரசு நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பேரில் நடந்து கொண்டது மாதிரி ஜெயவர்த்தனா மாணவர்கள் விஷயத்தில் நடந்து கொள்ள முடியாது என்று சதிக்கும்பல் கூறுகிறது. அஹிம்சைப் போராளிகளை எப்படிச் சமாளிப்பது என்று ஜயவர்த்தனா குழப்பநிலையில் தடுமாறிக் கொண்டிருந்ததாகவும் இவர்கள் சொல்லுகிறார்கள்.

தனது ஆட்சியில் கூடிய பாதுகாப்பில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ச் சிறைக் கைதிகள் 55 பேரைக் குரூரமாகக் கொலை செய்வித்த ஜே. ஆர். ஜயவர்த்தனா அஹிம்சைப் போராளிகளை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் குழப்ப நிலையில் இருந்தாராம். புலிகளின் நடவடிக்கையால் இப்படித் தடுமாறிக் கொண்டிருந்த ஜயவர்த்தனாவுக்கு நல்ல 'சான்ஸ்' அடித்து விட்டதாம்.

சதிக்கும்பலின் அழகான சோடனை இது.

ஐரிஷ் போராளிகளின் மரணத்தை நியாயப்படுத்தும் பாங்கில் சதிக்கும்பல் எழுதியிருப்பது PLOT என்னும் சதிக்கும்பலின் மிகவும் கேவலமான அரசியல் பிற்போக்குத்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

இத்தகைய அரசியல் பிற்போக்குத்தனம் PLOT கும்பலின் எல்லா எழுத்திலும் நிரந்தரமாக இழையோடுகிறது.

### பயங்கரவாதிகள்?

''உண்மையான பயங்கரவாதிகளைக் கைது செய்து, காவலில் வைத்து, சிறைப்படுத்தி வைத்திருப்பதிலாவது கொஞ்சம் நியாயம் இருக்கிறது; பனாகொடையில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்தவர்களில் பலர் அப்பாவிகளாவார்கள்'' என்று (There is some justification for arrest, dettention and imprisonment of actual terrorists but among the detenus of Panagoda there were many innocent people) S.A. டேவிட் அவர்கள் Detention Torture and Murder in Srilanka என்ற சிறு நூலில் எழுதுகிறார்.

**PLOT கும்பலின் பார்வையில் பொபி சாண்ட்ஸ் ஒரு கிரிமினல்!**

இக்கூற்றிலிருந்து PLOTன் ஞானபிதா திரு. எஸ். ஏ. டேவிட் வெளிப்படுத்துவது என்ன?

பனாகொடையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பல அப்பாவிகளைவிட மற்ற உண்மையான பயங்கரவாதிகளைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்பதுதான். ஸ்ரீலங்கா அரசு கூறும் 'பயங்கரவாதிகள்' கருத்தோட்டத்தினை ஏற்றுக்கொண்டு அவர்களைக் கைது செய்து காவலில் வைப்பதில் ஓரளவு நியாயமும் உண்டு என்று மிகவும் கடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தினையே நியாயப் படுத்துகிறார்.

பனாகொடையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த எவரும் பயங்கரவாதிகள் இல்லை .என்றும் அவர்களைக் கைது செய்து சித்திரவதைப் படுத்தி காவலில் வைத்ததில் சிறு துளியும் நியாயம் இல்லை என்றும் S.A. டேவிட் 'அய்யா' அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறோம். 'நேர்மை' **புத்திக்கூர்மை,** கடும் உழைப்பு' (அதே நூல்: பக்.2) ஆகியவற்றால் முன்னுக்கு வந்தவரும், உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்து வந்தவருமான திரு. டேவிட் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இந்த பாலபாடம் கூடத் தெரியாமல் போனது விந்தை தான்.

இவர்களின் சிந்தனைகள் கிழடு தட்டிப்போவது என்பது வேறு. ஆனால், இவை சமூகத்தில் நச்சுக் கருத்துக்களையல்லவா மிகவும் சாதுரியமாகப் பரப்புகின்றன? PLOT கும்பலின் நச்சுச் சிந்தனைப் போக்கிற்கு டேவிட் எழுதியுள்ள அதே நூலில் இருந்து இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம்.:

### உயிருள்ளவரை புண்யா!

''மறுநாள் திரு. புண்யா டி சில்வா (A.S.P, C.I.D) என்னைக்குறுக்கு விசாரணை செய்தார். குறுக்கு விசாரணையின் முடிவில், ''திரு.டேவிட், பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கானோரை நான் விசாரணை செய்திருக்கிறேன். ஆனால், உங்களுடைய விசுவாசத்திலும் தியாகத்திலும் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. உங்களுடைய இலட்சியங்களை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆனால் உங்களை ஒரு ஜென்டில்மென் (Gentle man) என்று நான் எப்போதும் மதிப்பேன்'' என்று தன் மனதில் பட்டதை என்னிடம் சொல்வதற்கு இந்த அதிகாரிக்கு தைரியம் இருந்தது. என் தலையிலிருந்து பெரும் பாரம் இறங்கியதைப்போலிருந்தது. என்னை மிகவும் மரியாதையுடனும் அன்புடனும் நடத்திய திரு. புண்யா டிசில்வாவையும் திரு. விஜயதிலக்க என்பவரையும் நான் உயிருள்ள வரை நன்றியுடன் நினைவு கூர்வேன்'' என்று டேவிட் எழுதுகிறார்.

புண்யா டி சில்வா என்ற இந்த சி.ஐ.டி. அதிகாரி. டேவிட் அய்யாவை 'Gentle man' என்றதும் இவருக்குக் குளிர்ந்து போய்விட்டது. உயிருள்ள வரை புண்யா என்று சத்தியம் பண்ணுகிறார்.

தமிழீழத்தின் விடுதலைப் போராளிகளை அடித்து, நொறுக்கி, சித்திரவதை செய்து, வாக்கு மூலமும் எடுத்துக் கொண்ட பிறகு எல்லாக் கைதிகளுக்கும் அதிகாரிகள் முதுகில் தான் தட்டிக் கொடுக்கிறார்கள்.

யார் இந்த புண்யா டி சில்வா?

சிங்கள பௌத்த இனவாதத்தில் ஊறிப் போன இவன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன். காலியில் ரிச்மண்ட் கல்லூரியில் கல்விகற்ற இவன் ஸ்ரீ.ல.சு. கட்சிக்காலத்தில் துரிதமாகப் பதவி உயர்வு பெற்று முன்னுக்கு வந்தவன். பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களைத் துன்புறுத்தி, சித்திரவதைப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதில் கைதேர்ந்தவன்.

இதே புண்யா டி சில்வா,

### ''ஈழநாடு'' ஆசிரியர் தலையங்கத்திலிருந்து:

**தேவை : மர்மம் அல்ல; தர்மம்.**

''இனந்தெரியாத சிலரால் ஒன்பது உண்ணாவிரதிகளும் கடத்திச் செல்லப்பட்டு விட்டனர். இதன் உண்மையை எவரும் சந்தேகிக்கவில்லை; அவர்கள் உயிருக்கு ஆபத்து இருக்கமாட்டாது என்பதும் பகுத்தறிவுக்குப் பொருத்தமானது.

இதனை ஒரு மர்மநாடகமாக்கி நூற்றுக்கணக்கான கேள்விகளை எழுப்பி, விடயத்தைப் பிரபலப்படுத்தித் திசை திருப்புவது இன்றைய குழப்பமான நிலையில் அமைதிக்குதவாது. வாசகர்களின் எண்ணங்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

ஆண்டவனே ! அபாயத்தை நாடிக் கொண்டிருந்த மாணவர்கள் அந்த நிலையிலிருந்து நீக்கப்பட்டனர்; மக்கள் வெள்ளம் சட்டென வடிந்தது ஒரு பெரும் நெருக்கடி தற்காலிகமாவது அமந்துவிட்டது என்பதை யார் மறுப்பார்? போராட்டம் தொடர, வெற்றி பெற வேறு வழிகள் உண்டு.

பகுத்தறிவுடையவர்களே பத்திரிகை வாசகர்கள் என்பது கோட்பாடு; எதனையும் நம்பும் மூடர் இல்லாமலில்லை. அதுமட்டுமல்ல விவேகிகளே இக்குறைபாட்டுக்கு சில வேளையில் பலியாகின்றனர். ஆனால் அதனை வளர்ப்பது தர்மம் அல்ல.

எந்த விடயத்திலும் மர்மத்தையல்ல தர்மத்தையே காணமுயல வேண்டும். (ஈழநாடு: 19—1—84)

www.eelamview.com

www.eelamview.com

விஜயதிலக ஆகிய அதிகாரிகளைப்பற்றி மட்டு நகர்ச் சிறைச்சாலையில் இன்றும் துயருற்றுக் கொண்டிருக்கும் வண. தந்தை சிங்கராயரின் அனுபவத்தைப் பார்ப்போம்.

''சாகும்வரை உண்ணாவிரதம்—சுவாமி சிங்கராயர் முடிவு'' என்ற தலைப்பில் ''சுதந்திரன்' பத்திரிகை (6—2—83) யில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :

''யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் வைத்து சுவாமி சிங்கராயரிடம் விசாரணை நடத்தி வாக்கு மூலம் பெற்றதாகக் கூறப்படும் இரகசிய போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் திரு. புண்யா டி. சில்வா, 1-2-83ல் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார். சுவாமி சிங்கராயரிடம் அங்கு வைத்துத் தனிமையில் மீண்டும் ஒப்புதல் வாக்குமூலம் பெற முயற்சித்தார் என்று கூறப்படுகிறது.

திரு. புண்ணியா டி.சில்வாவைக் கண்டதும் சுவாமி சிங்கராயர், தமக்குப்பொறுப்பாக இருந்த உதவிச் சிறை அதிகாரியிடம், ''இதே அதிகாரிதான் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தம்மைச் சித்திரவதை செய்து துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்துப் பெற்றதாகவும் குறிப்பிட்ட அதிகாரியினால் இங்கும் தமக்குத் துன்புறுத்தல் நடக்கக்கூடுமென அஞ்சுவதாகவும் புகார் செய்திருக்கிறார்.

இதையடுத்துச்சிறைச்சாலை அதிகாரி சிறைக்குள் நடக்கும் சம்பவங்களுக்குத் தாமே பொறுப்பு என்றும்துன்புறுத்தல் நடப்பதற்குத் தாம் இடமளிக்கப் போவதில்லையென்றும் விசாரணை தமது கண் முன்னலேயே நடைபெறும் என்று உறுதி அளித்தாராம்.

இதையடுத்து குறித்த போலீஸ் அதிகாரி, சிங்கராயர் இருந்த அறைக்குள் அனுமதிக்கப்பட்டார்.— உள்ளே சென்ற அதிகாரி உடனடியாகக் கதவை உள்ளே தாழ்ப்பாளிட்டுவிட்டு, சுவாமியைத் திரும்பவும் மிரட்ட முயற்சித்திருக்கிறார். சுவாமி சிங்கராயர் இதைக் கண்டு சத்தமிடவே, உதவி ஜெயிலர் உடனடியாக பிரதான ஜெயிலரை அழைத்து வந்து நிலையை விளக்கினார்.

பிரதான சிறை அதிகாரி கதவுகள் இரண்டையும் உடனடியாகத் திறந்துவிட்டு, ''சிறையில் உள்ளவர்களுக்கு நாமே பாதுகாப்பு; எமக்கு முன்னலேயே விசாரணை நடைபெறவேண்டும்'' என்று இரகசியபோலீஸ் அதிகாரிக்கு கட்டளையிட்டார்.

இதற்கு முன் இதே அதிகாரியிடம் வண.சின்னராசா பேச்சுக் கொடுத்தபோது எம்மைத் துன்புறுத்தி சித்திரவதை செய்து நாம் கூறுதலற்றில் எல்லாம் கையொப்பம் வாங்கியுள்ளீர்கள். இக்கொடுமைத்தனமான செயலுக்கு உங்களுக்கு ஆண்டவனே தண்டனை கொடுப்பார் என்று கூறியதாகத் தெரிகிறது.

வணக்கத்திற்குரிய குருமார்கள் இருவரிடம் இவ்வளவு மோசமாக நடந்து கொண்ட போலீஸ் அதிகாரியொருவர் தன்னை 'கனவான்' என்று கூறியதற்காக அவரை உயிருள்ளவரை மறக்க மாட்டேன் என்று டேவிட் உலகிற்குக் காட்டும் சித்திரம் எத்தகையது? தன்னுடன் ஒரு போலீஸ் அதிகாரி எப்படி நடந்து கொள்கிறார் என்பது மட்டுமல்ல, தன்னை போன்ற மற்ற சந்தேக நபர்களுடனும் அவர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்று பூரணமாகத் தெரிந்தால் தான் அவரைப் பற்றி நாம் ஒரு கண்ணேட்டத்தை மக்களுக்கு கொடுக்க முடியும். டேவிட் அய்யாவின் 'உயிருள்ளவரை புண்யா' முடிவுகள் இவ்வளவு அவசரமாக வெளிப்படுவதன் காரணம் என்ன?

புலிகளைப் பற்றி தங்கள் PLOT ஏட்டில் இவர்கள் முன் வைக்கும் காரணம் டேவிட் அய்யாவிற்குத்தான் மிகவும் அழகாகப் பொருந்துகிறது.

> ''These misconceptions are caused by a lack of analytical thinking and poor knowledge'' இத்தகைய தவருன கருத்துகள் அறியாமையாலும் பகுத்தாராயும் சிந்தனையின்மையாலுமே உருவாகின்றன''.

அறியாமையாலும் பகுத்தாராயும் சிந்தனையின்மையாலும் சதிக்கும்பல் மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் பற்றி ஆழமான ஆய்வு எதுமின்றி முன் வைத்திருக்கும் கருத்துகள் நகைப்புக்குரியவை.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே அக்கறையும் ஈடுபாடும் காட்டி வந்திருக்கும் எங்களுக்கும், இப்போது தான் விழித்தெழுந்து விட்டு அவசர அறிக்கைகள் விட்டு அரசியல் லாபம் தேட முனையும் (PLOT) சதிக்கும் பதுக்கும் மைல் கணக்கில் வித்தியாசம் இருக்கிறது.

> **''பயங்கரவாதிகளைக் கைதுசெய்வதில் ஓரளவு நியாயம் இருக்கிறது.''**
>
> **''புண்யா டி சில்வாவை உயிர் உள்ளவரை நன்றியுடன் நினைவு கூர்வேன்''.**
>
> —எஸ்.ஏ.டேவிட் (PLOT பிரசுரத்திலிருந்து)

பல்கலைக்கழக மாணவர்கள் பிரச்சினை தொடர்பாக துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்த ஒரு ராஜ்மோகன் வீதியிலே சுடப்பட்டு மரணித்திருக்கிறன். தெருவில் இறங்கும் ஒரு தமிழனின் முதுகில் துப்பாக்கி முனைகள் அழுந்துகின்றன. இராணுவத்தின் கோபுரக்கவச வண்டிகள் யாழ்ப்பாண வீதிகளில் ஊர்வலம் போகின்றன.

இந்த அடக்குமுறை தர்பாருக்கு எதிராக தமிழீழத்தின் பாடசாலை வகுப்பறைகளில் இருந்து தேவாலய மண்டபங்கள் வரை விடுதலை முரசங்கள் அதிர்கின்றன. அந்த விடுதலை முரசு ஒரு பல்கலைக்கழகத்திற்குள்ளே மட்டும் ஓசை எழுப்பமாட்டாதா?

''இத்தருணத்தில் நாம்
போராடவில்லை என்றால்
எதிரி—
துப்பாக்கியால் நம் உயிரைப்
பழி வாங்குவான்
அதன் பின்
நம் எலும்பினைக் குத்திக்
காட்டி
இந்த எலும்புகள் எல்லாம்
அடிமையின் எலும்புகள்
என்று
எக்காளமிடுவான்''

என்ற சினக்கவிஞன் ஒருவனின் பாடல் இப்போது எங்களுக்காகத்தான் பாடப்பட்டிருக்கிறதா? ★



# ஒரு வேங்கையின் வீர மரணம்

சங்கர்—

சுரேஷ்—

ஆயுதப்படைகள் வலை விரித்துத் தேடும் செ. சத்தியநாதன்.

இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கொரில்லா வீரன்; தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.


கண் திறக்காத பூனைக்குட்டியாக—நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீரமறவன். அரசபடையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில்— சுற்றி நின்று கமாண்டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்தபோது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அடைந்துக் கொள்கிறன்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்புக்களிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசபடைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி அவன் கிராமங்களில்,, வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சூழ்ந்து கொண்டிருக்கும் எதிரிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத்தவறும் கூட ஒரு கொரில்லா வீரன்என்றமுறையில்தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரசபடைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்தி விட்டுத்தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும்கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரசபடைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப் போராளிகளை ஆயுதங்களோடு அரசபடைகள் கைது செய்வதை அனுமதிக்கும்போக்கானது,அரசபடைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினன்.

படுகாயமுற்ற நிலையிலும் கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கொரில்லாப்பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவன், பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்து விட்டோம் என்று தெரிந்தபின் தான் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்துக் கீழே வைக்கிறன். உயிரோடும் ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிட முடியும் என்று பாசிச சர்வாதிகாரி ஜே.ஆர். ஜயவர்த்தனஸ்ரீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது, நெல்லியடியில் அரசபடைகள் மீது சங்கர் நடத்திய கொரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின்மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது. நெல்லியடியில் அரசபடையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகல விரித்து, பக்கவாட்டில் நின்று அரசபடையினர்மீது குண்டு மாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கொரில்லாத் தாக்குதலின் வெற்றிக்குச் சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் போலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு, பிரதான வீதியிலிருந்து சற்றுத் தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின்மீது முன்பக்க வாயிலூடாகத் தாக்குதல்



சங்கர்

**தோற்றம் 19.6.61**
**மறைவு 27.11.82**

நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்துவிட முடியும்? ஜி 3 துப்பாக்கி சகிதம் படுத்துக் கிடந்து சங்கர் சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் அப்பகுதி அரசபடைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறன்.

எந்த விதமான வாகனத்தையும்நேர்த்தியாகச்செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைபபட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கொரில்லா தாக்குதலையடுத்துஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் ஸ்தலத்திற்கு வரு முன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தை செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விஷயங்களை மற்றவர்களிடம்கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழு மூச்சாக இருந்தது. விடுதலைப்போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின்அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற - தூய்மை மிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டும்என்று அவன்எப்போதுமே சொல்லி வந்திருக்கிறன். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறன்.

சாகும் தறுவாயிற் கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவில்லை. 'தம்பி தம்பி' என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண் கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனன்.

''ஒரு உண்மை மனிதனின் கதை'' என்ற ரஷ்யநாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மைமனிதனின் கதையே ஒரு வீர காவியம் தான். ★

www.eelamview.com